பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை 03.12.2021 கதிர் 28

### இது ரகசியம் அல்ல!

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி கூண்டோடு கவிழ்ந்தது தெரிந்த விடயம்தான். இலங்கை முழுவது கிடைத்த மொத்த வாக்குகளையும் சேர்த்து ஒரேயொரு தேசியப்பட்டியல் இடம் தான் அக்கட்சிக்கு.

நாட்டில் மாறி மாறி பக்கம்02

# ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்துக்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து வைக்கப்பட்டது .

நேற்று மாலை 5.30 மணிக்கு யாழ்.மாநகர மேயரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும்,சிறப்பு 12



# யாழில் கரையொதுங்கும் சடலங்கள்; 6 நாள்களில் 6 ஆண்களின் உடல்கள்!

## நேற்று மாத்திரம் இரு பிரேதங்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்.மாவட்ட கடற்கரையோரங்களில் தொடர்ந்து ஆண்களின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன. பருத்தித்துறை – சக்கோட்டை கடற்கரையிலும் , மருதங்கேணி கிழக்கு – சுண்டிக்குளம் கடற்கரையிலும் நேற்று இரு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

நேற்று கரையொதுங்கிய இரு சடலங்களுடன், கடந்த 6 நாள்களுக்குள் 6 சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. 2





நேற்று மாலை யாழ்.ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழாவுக்காக அப்பகுதிக்க வந்த பிரதம விருந்தினர் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேரடியாக அருகில் இருந்த நாகவிகாரைக்கு சென்று இறங்கினார். அங்கிலிருந்து பௌத்த குடை மரியாதையுடன் விகாராதிபதி வர, அவருடன் சேர்ந்து ஆளுநரும் கண்டிய நடனத்துடன் அழைத்து வரப்பட்டார்.

எனினும் பின்னர், நிகழ்வு மேடையில் இருந்து திறப்பு நிகழ்விடத்துக்கு ஆளுநரும், ஏனையோரும் சென்ற போது மேளதாளங்கள் நாதஸ்வரத்துடன் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## ஊடகவியலாளரைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய பருத்தித்துறைப் பொலிஸார்

### மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் முறைப்பாடு பதிவு

பருத்தித்துறை நீதிமன்றத்துக் குச்செய்தி சேகரிக்கச்சென்ற பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர் நீதிமன்ற வாயில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரால் நேற்று அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து அவர் மீது துப்பாக்கியைக் 2



# 8 மாதங்களுக்குப் பின் அஸாத் ஸாலி விடுதலை

### அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிப்பு

மதக் குழுக்களுக்கிடையில் பகைமையைத் தூண்டிய குற்றச்சாட்டில் 8 மாதங்களுக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலியை அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

தீர்ப்பை அறிவித்த நீதிபதி, இனங்கள் அல்லது மதங்களின் நல்லிணக்கத்தைச் 12



## அஸாத் ஸாலிக்கு எதிராக பொய் முறைப்பாடு; 3 எம்.பிக்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

அஸாத் ஸாலிக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான மொஹமட் முஸம்மில், நிமல் பியதிஸ்ஸ மற்றும் ஜயனந்த வெல்லபட ஆகியோரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா நேற்று அழைப்பாணை வெளியிட்டுள்ளார்.

அஸாத்ஸாலியை அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலை செய்வதாக தீர்ப்பை அறிவித்த பின்னர், அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, வழக்கின் முறைப்பாட்டாளர்களான மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனது கட்சிக்காரருக்கு எதிராக தீங்கிழைக்கும் முறைப்பாட்டொன்றைத் தாக்கல் செய்துள்ளனர் எனவும், அதன்படி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 17 (2) ஆவது 2

## வடக்கு மின்னுற்பத்தி செயற்றிட்டங்கள்; இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது சீனா

வடக்கிலுள்ள நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின்னுற்பத்தி திட்டங்களை சீனா இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளது.

மூன்றாவது தரப்பொன்று பாதுகாப்பு தொடர்பில் முன்வைத்த விடயங்கள் காரணமாக சீன நிறுவனம் இந்தச் செயற்றிட்டத்தை இடைநிறுத்தியதாக இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் ருவிட்டர் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 12

## பொதுமக்களையும் அரச அதிகாரிகளையும் பகைக்காமல் காணி விடயத்தைத் தீருங்கள்!

### பாதுகாப்பு அமைச்சுக்கு பிரதமர் அலுவலகம் வழிகாட்டல்

கொழும்பு, டிசெ, 03

வடக்கு, கிழக்கில் படையினருக்குத் தேவையான தனியாரின் காணிகளைச் சுவீகரிக்கும் விடயத்தை பொது மக்களையும் அரச அதிகாரிகளையும் தேவையற்றுப் பகைத்து, அவர்களை அதிருப்திக்குள்ளாக்காமல் சுமுகமாகத் தீர்ப்பதில் அவதானம் செலுத்துங்கள்! – இவ்வாறு பாதுகாப்பு அமைச்சுக்கு பிரதமர் அலுவலகம் வழிகாட்டல் வழங்கியிருக்கிறது என அறியவருகின்றது.

படை முகாம்களுக்கு 12

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆட்சிக்கு வந்த – இலங்கையின் மூத்த – கட்சிக்கு யாரும் எதிர்பாராத பலத்த அடி கடந்த தேர்தலில் வீழ்ந்தது. அத்தோடு அதன் கதை முடியப் போகின்றது என்பது தான் நிலைமை.

அக்கட்சியில் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் எஞ்சியிருந்த மிச்ச சொச்ச தலைவர்களும் இப்போது ஒவ்வொருவராகக் கழற ஆரம்பித்து விட்டனர்.

நாய் செத்தால் உண்ணிகள் தானே கழன்று விழுவது இயற்கைதான்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஐ.தே.கட்சியை விட்டு விலகி விட்டார்.

ஐ.தே.கட்சியின் முன்னாள் மூத்த தலைவர் காமினி திஸாநாயக்காவின் மகனும், அக்கட்சியின் மற்றொரு மூத்த பிரமுகர் முன்னாள் சபாநாயகர் கருஜெய சூரியவின் மருமகனுமான நவீன் திஸநாயக்காவும் ஐ.தே.கட்சியை விட்டு வெளியேறத் தயாராகி விட்டார் என அவருக்கு நெருக்கமான சில வட்டாரங்கள் கூறுகின்றன.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சாகாக்களான சாகல ரட்ணாயக்கா, அகிலவிராஜ் காரியவசம் மற்றும் ரணிலின் மருமகனான ருவான் விஜேவர்த்தனா போன்ற சிலரே இனிக் கட்சியில் மிஞ்சுவர் எனக் கூறப்படுகின்றது.

ஐ.தே.கட்சியை – UNP-யை – Uncle Nephew Party (மாமன், மருமகன் கட்சி) என்று கிண்டலாக முன்னர் கூறுவர். ஆக மாமன் ரணிலும், மருமகன் ருவானும் மட்டுமே கடைசியில் ஐ.தே.கட்சியில் மிஞ்சி, அந்தப் பெயரை உறுதிப்படுத்தப் போகின்றார்கள் போலும்.

காலம் செய்யும் கோலம் – ஐ.தே.கட்சி. நல்ல படிப்பினை.

★ ★ ★

மேயர் மணிவண்ணனின் ஆரிய குளத் திட்டம் நிறைவேறிவிட்டது. நல்லது. வாழ்த்துகள்.

ஏதோ நல்ல விடயத்தை – பத்திரிகைகள்தான் – அதுவும் குறிப்பாக 'காலைக்கதிர்'தான் – ஏதேதோ சிக்கல் இருப்பதாக புரளி கிளப்பி விட்டிருக்கின்றது என சில பட்சிகள் புலம்பித் திரிக்கின்றன. அதுவும் நல்லதுதான்.

இதற்குத்தானா ஆசைப்பட்டாய் பால குமாரா என்று கேட்பது போல இனி அந்தப் பட்சிக்கும் சேர்த்து செய்திகள் வந்து சேரும். அப்போது அந்தப் பட்சியும் அதைப் பராமரிக்கும் சனீஸ்வரப் பறவையும் என்ன செய்யப் போகின்றன எனப் பார்க்கலாம்.

யாழ்.மாநகர சபையின் நேற்றைய திறப்பு விழாவுக்கு வந்திறங்கிய பிரதம விருந்தினரான ஆளுநரும் ஆரியகுளம் விகாரையின் விகாராதிபதியும் விகாரையிலிருந்து நிகழ்வு இடம் வரை கண்டிய நடனம், பௌத்த குடை ஆகியவற்றுடன் அழைத்து வரப்பட்ட காட்சியே அந்தப் பட்சி தரப்பினருக்கு இனி நடக்கப் போகின்றவைக்குக் கட்டியம் கூறுவதாக இருக்கும் என நம்புகிறேன்.

இன்னொரு விடயமும் உண்டு. கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாநகர சபையின் மாதாந்த அமர்வு. அதற்கு முதல் நாள் யாழ்.மாநகர மேயர் மணிவண்ணனுக்கு ஒரு கடிதம் வந்து சேருகின்றது – வடக்கு ஆளுநரிடமிருந்து.

மூலக் கடிதம் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும், பிரதிகள் மாநகர மேயர் மற்றும் யாழ் அரச அதிபருக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

அதில், ஆரியகுளச் சுற்றாடலில் விடிகாலை 5 மணியளவில் நான்கு மாதங்களினதும் – பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமியம் ஆகிய நான்கு சமயங்களினதும் – பாடல்களை ஒலிக்க விடும்படி ஆளுநர் வழிகாட்டல் வழங்கியிருந்தார் எனத் தெரியவருகின்றது.

இதில் இரண்டு விடயங்கள்.

ஒன்று – இந்தக் கடிதம் திங்கட்கிழமை மேயர் கைக்குக் கிடைத்தமையையும் அவரும், யாழ்.மாநகர ஆணையாளரும் அதனை வாசித்து அறிந்து கொண்டமையையும் உறுதிப்படுத்த முடிந்தது. ஆனால் அடுத்த நாள் நடந்த மாநகர சபையின் கூட்டத்தில் இப்படி ஒரு கடிதம் தமக்குக் கிடைத்துள்ளமை குறித்து மேயர் மூச்சே விடவில்லை. அத்தகைய மூடி மறைப்புத் தான் வழமையான சிக்கல்.

அடுத்தது – யாழ்.மாநகர சபை இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு உட்பட்ட விடயம் ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல். அங்கு பாட்டுக்களையும் ஒலிக்கலாமா என்பது தொடர்பில் சபையை வழி நடத்தும் அதிகாரம் – தீர்மானிக்கும் அதிகாரம் – ஆளுநருக்கு உண்டா என்பது கேள்விக்குறியே.

ஆனால் அப்படி எமது புதிய ஆளுநர் வழிகாட்டல் உத்தரவு பிறப்பிப்பது ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல. அவர் அப்படித்தான் நடப்பார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தப்படி காணியும், பொலிஸும் மாகாணத்துக்குப் பாரப்படுத்தப்பட்டவை. ஆனால் அந்தத் திருத்தம் வந்து 33 ஆண்டுகள் கடந்து விட்டன. அரசமைப்பில் இருக்கும் அந்த ஏற்பாட்டை இதுவரையான பௌத்த, சிங்கள அரசுகள் எவையும் நடைமுறைப் படுத்தவேயில்லை.

ஆனால், வடக்கு மாகாண சபைக்குப் பொறுப்பான வடக்கின் புதிய ஆளுநரோ அந்த அதிகாரங்கள் தமக்கு இருப்பது போல நடந்து கொள்கின்றார்.

வாள்வெட்டுக் குழுக்களை அடக்குவேன் என பொலிஸ் அதிகாரம் கையிருப்பவர் போல பீற்றுகின்றார். காணி அதிகாரமும் மாகாண சபையின் கைகளி என்ற நினைப்பில், தனியார் காணிகளை படையினருக்குத் தானம் செய்வதில் தலையிட்டுச் சிரத்தை காட்டுகின்றார்.

அத்தகையவர் மகிழ்வூட்டும் திடலில் மதப் பாடல்களை ஒலிக்கவிடும்படி வழிகாட்டல் பணிப்பு விடுப்பதில் வியப்பில்லைத்தானே...!

அவர் விருப்பப்படி நடந்தால், ஆரிய குளம் சுற்றாடல் மக்கள் பிரித் ஓதும் மகிழ்வுடனும் தினசரி நித்திரை விட்டெழலாம்.

இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா? – பட்சிக்கான கேள்வி இது.

இன்னொரு விடயமும் உண்டு. மகிழ்வூட்டும் திடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 'ஆரியகுளம்' என்ற பெயரும் பிற விடயங்களும் தமிழில் மட்டுமே உள்ளனவாம். மும்மொழியில் போடுவதற்கு என்ன என்ற கேள்வி கூட மேலிடத்திலிருந்து வந்துள்ளதாம்.

இனித்தான் மேயர் மணிவண்ணன் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் காத்திருக்கின்றன என்று தோன்றுகின்றது.

நேற்றைய மகிழ்வூட்டும் திடல் திறப்பு நிகழ்வுக்கு யாழ்.மாநகர சபையின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 16 பேரும் 'அப்செண்ட்'. அவர்களில் ஒருவர் தமக்கு அழைப்பிதழ் கூடத் தரப்படவில்லை,நான் எப்படி நிகழ்ச்சிக்குப் போவது என்று கேள்வி எழுப்பினார்.

இந்தப் பின்புலத்தில் மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி சபையில் எடுக்கப்படுகின்றது. மேயர் மணிவண்ணனின் பதவி தப்புமா என்பது அன்று தெரியவரும்.

கடந்த சபைக் கூட்டத்தில் ஈ.பி.டி.பியும் மேயர் மணிவண்ணனைக் கடித்துக் குதறத் தவறவில்லை. அதுதான் அக்கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாடும் என்கின்றன சில வட்டாரங்கள்.

அது உண்மை என்றால் யாழ்.மாநகர சபையில் புதிய மேயர் தெரிவு மிக விரைவில் நடக்கும் என்று நம்பலாம்.

– மின்னல் –

## ஊடகவியலாளரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காண்பித்து பொலிஸ் உத்தியோகத்தர் அச்சுறுத்தினார் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை இரண்டு பேருக்கும் இடையே இணக்கத்துடன் முடிக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முயற்சித்த போதும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயராமச்சந்திரன் சுலக்சன் என்ற பிராந்திய ஊடகவியலாளரையே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி, அநாகரிகமாகவும் பேசியும் உள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்றுக்கு அருகில் உள்ள தேநீர் கடை உரிமையாளருக்கும், பருத்தித்துறை நீதிமன்ற வாயில் காவல் கடமையில் ஈடுபடும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையில் முரண்பாடு நிலவி வந்துள்ளது.

இந்நிலையில், நேற்று பருத்தித்துறை நீதிமன்றப் பாதுகாப்புக் கடமையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஈடுபட்டிருந்தார். அருகில் இருந்த தேநீர் கடைக்கு வருபவர்கள் கடைக்கு அருகில் தமது வாகனங்களை நிறுத்த முற்பட்டபோது, அவ்விடத்தில் வாகனங்களை நிறுத்த முடியாது என்றும், நீதிமன்ற உத்தரவு என்றும் தெரிவித்து கடைக்கு வருபவர்களை அங்கி ருந்து அகற்றும் நடவடிக்கையில் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் ஈடுபட்டிருந்தார்.

கடைக்கு வந்த நபர் ஒருவர் கடைக்கு முன்பாக தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு தேநீர் அருந்த உள்ளே சென்றபோது, அவரிடம் வந்து மோட்டார் சைக்கிளை எடு எனப் பொலிஸ் உத்தியோகத்தர் அநாகரிகமாகப் பேசி நடந்து கொண்டுள்ளார்.

அதன்போது குறித்த நபரும், இவ்விடத்தில் வாகனம் நிறுத்தத் தடை என எவ்வித அறிவித்தலும் இல்லை – வழமையாக இவ்விடத்தில் நாங்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்துகின்றோம் – இன்றைக்கு திடீரென வந்து நிறுத்த வேண்டாம் என அநாகரிகமாக என்னிடம் பேச முடியாது எனக் கூறியுள்ளார்.

அதையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அந்த நபர் , தனது கடமைக்கு இடையூறு விளைவித்தார் எனக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று தடுத்து வைத்தார்.

நீதிமன்றக் காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர், தனது கடமைகளை கைவிட்டுச் சென்றே இதனைச் செய்துள்ளார்.

அதன்பின்னர் சிறிது நேரம் பொலிஸ் நிலையத்தில் அவரைத் தடுத்து வைத்த பின்னர், தாங்கள் பொலிஸ் பிணையில் விடுவிப்பதாகக் கூறி, அவரை விடுவித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அறிந்து கொண்ட ஊடகவியலாளர், அது தொடர்பில் மேலும் அறிந்துகொள்வதற்காக, குறித்த தேநீர்க் கடைக்குச் சென்றுள்ளார்.

அதன்போது ஊடகவியலாளரும் கடைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கடைக்காரிடம் சம்பவம் தொடர்பில் விசாரிக்க முற்பட்டபோது, நீதிமன்றக் காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் அங்கிருந்து வந்து ஊடகவியலாளருடன் முரண்பட முனைந்துள்ளார்.

அதன்போது, தான் ஊடகவியலாளர் என அடையாளப்படுத்தியபோது, மோட்டார் சைக்கிளை இவ்விடத்தில் நிறுத்த வேண்டாம், அது நீதிமன்ற உத்தரவு என்று கூறியுள்ளார். அதற்கு , ஊடகவியலாளர் எங்கே மோட்டார் சைக்கிளை நிறுத்துவது எனக் கேட்டபோது, பொலிஸ் நிலையத்துக்குள் நிறுத்துங்கள் என கூறியுள்ளார்.

அதையடுத்து அவர் பொலிஸ் நிலையத்துக்குள் மோட்டார் சைக்கிளைக் கொண்டு சென்று நிறுத்தியபோது, கடைக்காரனுடன் கதைக்க வேண்டாம், இங்கிருந்து செல்லுங்கள் என அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளார்.

அதற்கு ஊடகவியலாளர் செவி சாய்க்காது சென்றபோது, பொலிஸ் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்வேன் என மிரட்டியுள்ளார்.

அதற்கு ஊடகவியலாளர் தான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை சந்திக்கின்றேன் எனக் கூறியபோது, தனது துப்பாக்கியை எடுத்து ஊடகவியலாளரை நோக்கி நீட்டி யாருக்கும் பயப்பட மாட்டேன், பொலிஸ் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்தவரைச் சுட்டேன் எனக் கூறுவேன் என மிரட்டியுள்ளார்.

அதன்போது அங்கு வந்த மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளரை மிரட்டிய சக பொலிஸ் உத்தியோகத்தரைச் சமரசப்படுத்தியமையுடன், ஊடகவியலாளரையும் அங்கிருந்து செல்லுமாறும், பொறுப்பதிகாரி காங்கேசன்துறை சென்றுள்ளார் எனவும், அவர் மாலை வந்த பின்னர் வந்து கதைக்குமாறும் கூறி அனுப்பிவைத்துள்ளனர்.

இந்நிலையில் பிற்பகல் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்த பொறுப்பதிகாரி, ஊடகவியலாளரை அழைத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரையும் ஊடகவியலாளரையும் சமரசப்படுத்த முயற்சித்தார்.

எனினும், சம்பவம் தொடர்பில் அறிந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊடகவியலாளர் தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமையைத் தடுத்தமை மற்றும் அச்சுறுத்தியமை தொடர்பில் முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்டு, விசாரணைகளை முன்னெடுப்பது பொலிஸாரின் கடமை என அறிவுறுத்தியது. அதையடுத்து ஊடகவியலாளரிடம் பருத்தித்துறை பொலிஸார் முறைப்பாட்டைப் பெற்றுக்

## அஸாத் ஸாலிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சரத்தின் கீழ் இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் எனவும் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இதன்படி, குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, மொஹமட் முஸம்மில் உள்ளிட்ட மூன்று முறைப்பாட்டாளர்களையும் அன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை வெளியிட்டார்.

## யாழில் கரையொதுங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு – மணற்காடு மற்றும் வடமராட்சி – வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதிகளில் இரு சடலங்களும், ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு கடற்கரையில் ஒரு சடலமும், கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணி கடற்கரைப் பகுதியில் ஒரு சடலமும் கரையொதுங்கி இருந்தன.

கரையொதுங்கிய ஆறு சடலங்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் தெரியாத நிலையில் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலைமை நீடிக்கின்றது. சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

## FACULTY OF ENGINEERING

Senior Professor/Professor of **Computer Engineering/ Electrical and Electronic Engineering/ Civil Engineering/ Mechanical & Process Engineering**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in ***Civil Engineering/Computer Engineering/ Electrical and Electronic Engineering/ **Mechanical & Process Engineering/ ***Engineering Mathematics/ ****Complementary Studies**

*For the positions in **Civil Engineering** special consideration will be given to those who have specialized or willing to specialize in Water Resource/ Environmental Engineering

**For the positions in **Mechanical & Process Engineering** special consideration will be given to those who are sound knowledge and skills in Machine Design, Thermal Engineering, Compressive Fluid Mechanics, Automobile Engineering, Mechatronics, Manufacturing Process Engineering, Energy Systems Engineering and Material Science Engineering.

***For the positions in **Engineering Mathematics**, special consideration will be given to those who are holding first degree in Engineering and have specialized or willing to specialize in Engineering Mathematics.

****For the positions in **Complementary Studies,** special consideration will be given to those who are sound knowledge and skills in Business Law, Marketing, Management (Financial + Resource + Entrepreneurial), Economic development and Advanced written English

## FACULTY OF AGRICULTURE

Senior Professor/ Professor of **Agronomy / Agricultural Biology / Agricultural Chemistry / Animal Science / Agricultural Economics / Agricultural Engineering**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in **Agronomy/ Agricultural Biology / Agricultural Chemistry / Animal Science / #Agricultural Economics / ##Agricultural Engineering**

**#For the Position in Agricultural Economics**
Preference will be given to those who have Specialized in Agricultural Extension or willing to specialize in Agricultural Extension.

**##For the Position in Agricultural Engineering**
Preference will be given to those who have specialized in Agricultural Farm Machinery or willing to specialize in Agricultural Farm Machinery.

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details.
**Closing date:**
Applications should reach us on or before the date given below:

| | |
|---|---|
| **Post of Senior Professor/Professor** | **- 31.01.2022** |
| **Other posts** | **- 31.12.2021** |

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self-evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see **http://www.jfn.ac.lk/index.php/circular/**) with a covering letter.

Perfected applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. Submission of Applications will not be entertained in person.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**30.11.2021**

# எரிவாயு காஸ் சிலிண்டர்கள் நாட்டில் வெடிக்கவில்லையாம்!

## அடுப்பில் கவனம் செலுத்துங்கள் என்கிறார் திஸ்ஸ குட்டியாராச்சி

நாட்டில் இதுவரை எந்தவொரு எரிவாயு சிலிண்டர்களும் வெடிக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது -

எரிவாயு அடுப்பைத் தவிர வேறு எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை சுட்டிக்காட்ட வேண்டும்.

மேலும், எரிவாயு கலவையில் பிரச்சினை இல்லை. ஆனால் எரிவாயு அடுப்பில்தான் பிரச்சினை இருக்கின்றது.

ஆகவே, எரிவாயு சிலிண்டர்களில் கவனம் செலுத்துவது போன்று எரிவாயு அடுப்புகளிலும் கவனம் செலுத்த வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் பெண்கள் சிறுவர் அவலம் எதிர்க்கட்சித் தலைவர் வேதனை!

இன்று இந்த நாட்டில் பெண்கள் தலைமுறை எதிர்கொள்ளும் நிலை மிகவும் வருத்தமளிக்கிறது என்றும் இந்த நாட்டிலும் பெண்களுக்குஎதிரானவன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெண்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான விவரங்களை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் உள்ள ஐம்பத்திரண்டு சதவீத பெண்களின் எதிர்காலத்தை பிரகாசமாக்க வேண்டுமானால் அதற்கான முறையான, உறுதியான மற்றும் நிலைபேறான திட்டத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

தற்போது இலங்கையில் மூன்று வருடங்களாகக் குழந்தைகளின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், கல்வி முற்றிலும் முறைசாராததாகி விட்டது என்றும் தெரிவித்தார்.

# மட்டு. மாநகர சபைக்கு புதிய ஆணையர் நியமனம்

உடன் அமுலுக்கு வரும் வகையில் மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில காலங்களாக மட்டக்களப்பு மாநகரசபையில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு மத்தியில் புதிய ஆணையாளர் ஒருவர் கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில காலமாக மட்டக்களப்பு மாநகர ஆணையாளராகப் பதவி வகித்த மா.தயாபரனுக்கு பதிலாக புதிய ஆணையாளராக ந.சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டுவிட்டரில் திடீர் மாற்றம்!

டுவிட்டரில் படம் மற்றும் வீடியோக்கள் பதிவேற்றம் செய்வது தொடர்பாக புதிய விதிமுறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

டுவிட்டர் நிறுவனம் பயனாளர்களின் தனியுரிமையைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் நிலையில், இந்த புதிய விதிமுறைகளைப் பிறப்பித்துள்ளது.

அதன்படி, டுவிட்டரில் தனி நபர்களின் படம், வீடியோக்களை அவர்களின் அனுமதியின்றி பகிரத் தடை செய்யப்பட்டுள்ளது.

பொதுநபர்களாக இல்லாதவர்கள் தங்கள் அனுமதியின்றி புகைப்படம் பகிரப்பட்டிருப்பதாக முறைப்பாடு அளித்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட படங்கள் மற்றும் வீடியோக்கள் உடனடியாக அகற்றப்படும் என்றும் ஊடகங்கள் மற்றும் பொது நலனுக்காக பகிரப்படும் படங்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்பு மாற்று சிகிச்சை செய்வதற்கு சிறுநீரகம் (A+ குருதி இனம்) அவசரமாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விரும்புபவர்கள் புகைபிடித்தல், மதுப்பழக்கம் இல்லாதவர்களாகவும் இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களால் பாதிக்கப்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். HLA Report வைத்திருப்பவர்கள் அவசரமாகத் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு - 0773126807**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## துலங்குமா மர்மம்?

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிய முடியாத மர்மம் வடக்கு, கிழக்கில் நீடிக்கின்றது.

இப்படி யுத்த காலத்தில் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டு போன மர்மங்கள் நிறைந்த பூமியாக எமது வடக்கு மாகாணம் நீடிக்கின்றது.

அந்த வரிசையில் புதிய மர்ம – திகில் – விடயம் ஒன்று இப்போது சேர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த மர்மத்தின் பின்னால் புதையுண்டு கிடக்கும் உண்மைகள், தகவல்கள், துப்புகள் வெளிவருமா என்பது தெரியவில்லை.

வடக்குக் கடலில் தினசரி கரை ஒதுங்கி வரும் மனிதர்களின் உடலங்கள் விவகாரம்தான் அது.

கடந்த நான்கு, ஐந்து நாள்களுக்குள் ஆறு மனித உடலங்கள இப்படிக் கரை ஒதுங்கியுள்ளன.

நேற்றுக் காலை பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியிலும், நேற்று மாலை வடமராட்சி மருதங்கேணி கடற்கரையிலும் தலா ஒவ்வொரு சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

இதற்கு முன்னர் மருதங்கேணி – கட்டைக்காடு, நெடுந்தீவு, மணல்காடு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் இவ்வாறு மனித உடலங்கள் கரைசேர்ந்திருக்கின்றன.

இந்தச் சடலங்கள் தொடர்பில் சில பொது விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இச்சடலங்கள் மோசமாக பழுதடைந்துள்ளன. அவற்றை அடையாளம் காண்பது இயலாததாக உள்ளது. குறைந்த பட்சம் அவை இரண்டு வாரங்களாவது கடல் நீரில் அள்ளுப்பட்டிருக்க வேண்டும்.

எல்லாச் சடலங்களும் ஆண்களுடையவை. வாட்டசாட்டமான ஆள்கள். அது மாத்திரமல்ல, அந்தச் சடலங்கள் எவற்றிலும் உடைகள் இல்லை. அது பலத்த சந்தேகத்தைத் தரும் விடயம்.

பத்துப் பதினைந்து நாள்கள் இவை கடல் நீரில் அள்ளுப்பட்டன என்றால், இச்சடலங்களுக்குரியவர்களின் இறப்பு அல்லது அவர்கள் கடலில் மூழ்கிய இடம் இலங்கைக் கரைக்கு அப்பால் வெகு தூரத்தில் என்று கருத முடியும்.

இலங்கைக்கு மிக நெருக்கமாக நூறு மைல்களுக்குள் இந்தச் சடலங்களுக்குரியவர்களுக்கு அனர்த்தம் நேர்ந்திருந்தால் இச்சடலங்கள் ஓரிரு நாள்களில் கரையை, எட்டியிருக்கும். இப்படி பத்துப் பதினைந்து நாள்கள் கடலில் அவை கிடந்து சிதிலமடையும் நிலைமை ஏற்பட்டிருக்காது.

இச்சடலங்களில் சிலவற்றில் கையில் – மணிக்கட்டில் – கயிறுகள் (நூல்கள்) கட்டப்பட்டமை அவதானிக்கப்பட்டிருப்பதால், இவர்கள் கீழைத்தேய நாடு ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

எனினும், இந்தியாவில் இருந்தோ அல்லது இலங்கையிலிருந்தோ எவரும் காணாமல் போயினர் என்றோ அல்லது படகுடன் கவிழ்வதற்கான பயணங்களை மேற்கொண்டனர் என்றோ தகவல் ஏதுமில்லை.

இச்சடலங்கள் பதினைந்து நாள்கள் வரை கடலில் மிதந்திருந்தால், மேலும் பலரின் சடலங்கள் கடல் உயிரினங்களுக்கு உணவாகி முற்றாகச் சிதிலமடைந்திருக்கலாம் என்றும் கூடக் கருதப்படுகின்றது. அந்த வகையில் இதுவரை வடக்குக் கடலில் கரை ஒதுங்கிய ஆறு சடலங்களுக்கு மேலும் பலருக்கு இது போன்ற கதி நேர்ந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இப்படி கரை ஒதுங்கும் சடலங்களின் மர்மம் எப்போது துலங்கும்? அல்லது துலங்காமலேயே நீடிக்குமா? தெரியவில்லை.

# வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்கு மத்திய வங்கி சலுகை அறிவிப்பு

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு பிரத்தியேகமான சலுகை ஒன்றை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பண்டிகைக் காலத்தில் அவர்களுக்கான விசேட சலுகையை வழங்க இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களால் டிசெம்பர் மாதத்தில் இலங்கையில் உள்ள வங்கிகள் மற்றும் ஏனைய முறைசார் வழிகள் ஊடாக இலங்கை ரூபாவாக மாற்றும் ஒவ்வொரு டொலருக்கும் 10 ரூபாவை மேலதிகமாகப் பெற்றுக் கொடுக்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வவுனியா ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குருக்கள் கோவிட்டால் மரணம்

வவுனியா, குடியிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களும், வவுனியாவின் மூத்த சிவாச்சாரியருமாகிய கணபதி சித்தர் சிவஸ்ரீ.க.கந்தசாமி குருக்கள் மரணமடைந்தார்.

சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து வைத்தியசாலையின் கொவிட் விடுதியில் அவர் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

71 வயதான அவர் யோகாசன கலைஞராகவும், ஜோதிட வல்லுநராகவும் திகழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவரது சடலம் சுகாதார நடைமுறைகளுக்கமைய பூந்தோட்டம் இந்து மயானத்தில் எரியூட்டப்பட்டது.

# சம்மாந்துறையிலும் நேற்று வெடித்தது எரிவாயு அடுப்பு

(பாறுக் ஷிஹான்)

தேநீர் தயாரிக்கப் பயன்படுத்திய எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் பதிவாகியுள்ளது.

நேற்றுக் காலை சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி - 1 பகுதியில் குறித்த எரிவாயு அடுப்பு வெடிப்புக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

வழமை போன்று தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பை இயக்கியபோது குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த எரிவாயு அடுப்பை இயக்கி விட்டு வெளியில் சென்ற வேளை இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது எனப் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மர்மமான முறையில் யுவதி ஒருவர் சாவு!

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுப்புகன்னிய பகுதியில் பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெண் வீட்டுக்கு அருகில் உள்ள காணி ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் இல்லுகன்னியா வடக்கு பகுதியை சேர்ந்த 24 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன்போது உயிரிழந்த பெண்ணுக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் தலையில் பலத்த காயங்கள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெண்ணின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பஸ் கட்டணங்கள் உயர்த்தப்படல் வேண்டும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் கோரிக்கை

பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட வேண்டுமென தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கோரியுள்ளார்.

ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 20 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

விருப்பமின்றியேனும் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பஸ் கட்டண அதிகரிப்பு குறித்த யோசனை எதிர்வரும் வாரத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடமும், போக்குவரத்து அமைச்சிடமும் முன்வைக்கப்படும் என கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

# ரிஷாத் எம்.பி வீட்டில் வைத்து ஆறு சிறுமிகள் துஷ்பிரயோகம்!

## ஆளும் தரப்பு குற்றச்சாட்டு



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வைத்து 6 சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலன் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

சிறுமிகளில் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டார் எனவும் அவர் கூறினார்.

அப்போது எதிர்க்கட்சியில் இருந்த எந்த ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினரும் இது தொடர்பாகக் குரல் எழுப்பவில்லை என்றும், தற்போது போலியாக பெண் விடுதலைக்காகப் பேசுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மேலும் ஒரு தொகுதி பைஸர் நாடு வந்தது!

நாட்டிற்கு மேலும் ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 400 பைஸர் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

குறித்த தடுப்பூசி தொகுதி கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# PHYSICAL EDUCATION UNIT
# WALK -IN – INTERVIEW

Walk in interview for the recruitment of the Visiting Instructor for the following fields will be held on **09.12.2021 at 9.30 a.m** at the Board Room of the University of Jaffna.

**Jaffna**
**Visiting Instructor in Chess- Men / Chess- Women / Karate / Rugby/ Wrestling**

**Kilinochchi Premises**
Visiting Instructor in Badminton / Chess / Karate / Netball / Table Tennis/ Taekwondo/ Volleyball / Wrestling / Weightlifting

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self-prepared application for the above post.

**Qualification**

a) A graduate of a recognized university who has been a member of a National Team / National Champion or other equivalent attainments in the field of sports with the prior approval of the UGC

**OR**

b) A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

**OR**

c) G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05) years experience in organizing and implementing sports programmes.

| Post | Salary |
|---|---|
| Visiting Instructor | Rs. 750/- per hour |

**Note:-** This appointment will be 1½ hours per day and two days per week. Total hours of Appointment will be 1½ hours x 2 days x 4 weeks x 10 months = 120 hours.

Interested candidates with the required qualifications are expected to be present for the interview with relevant certificates, NIC and self-prepared application. Copy of the relevant certificates and NIC should be attached with the self-prepared application.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
01.12.2021


# எம்.எம்.பவுண்டேசன் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்.பல்கலை மாணவர்; 50 பேருக்கு மாதம் ஐயாயிரம்!



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயிலும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு எம். எம் பவுண்டேசன் நிதியத்தால் ஏ.கே.ஓ. புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று (நவ. 30) திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

உள்நாட்டிலுள்ள தன்னார்வத் தொண்டு நிதியமான எம். எம் பவுண்டேசன் 2018 ஆம் ஆண்டு முதல் ஏ.கே.ஓ புலமைப் பரிசில் திட்டத்தில் பங்குதாரராகச் செயற்பட்டு நாட்டிலுள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், கலை, கலாசாரப் பணிகளுக்கும், காலநிலை மாற்றத்துக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் உதவிகளைப் புரிந்து வருகிறது. அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்படும் வருமானம் குறைந்த மாணவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதன்படி, பல்கலைக்கழகத்துக்கும், எம். எம் பவுண்டேசன் நிதியத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும், எம். எம் பவுண்டேசன் நிதியத்தின் சார்பில் அதன் முகாமைத்துவ அறங்காவலர் டி. நிமல் மரின்டஸ் மற்றும் அறங்காவலர் நிலங்கா மரின்டஸ் ஆகியோரும் ஒப்பமிட்டனர். இந்த நிகழ்வின் போது யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ். ஐங்கரன், நிதியாளர் கே. சுரேஸ்குமார் ஆகியோரும் உடனிருந்தனர்.

# ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளுக்கு விண்ணப்பிக்காதோருக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 03

ஆசிரிய கலாசாலைகளுக்கான புதிய கல்வியாண்டுக்கான அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ள போதிலும் கொவிட் நிலைமை காரணமாக விண்ணப்பிக்கத் தவறியோருக்கு நேரடியாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சையில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது பட்டதாரிகள் அல்லாத - க.பொத. சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் போதிய தகைமை பெறாவிடினும் - நிரந்தர ஆசிரியருக்கான நியமனக் கடிதத்தைக் கொண்டிருந்தால் இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்குவதற்கான அனுமதியைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தகைமையைப் பயன்படுத்தி இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ளாதவர்கள் இருப்பின் உடன் அருகில் உள்ள கலாசாலை அதிபர்களோடு தொடர்புகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் 121 குடும்பங்களை சேர்ந்த 380 பேர் சீரற்ற காலநிலையினால் பாதிப்படைவு

சீரற்ற காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் தற்போது 121 குடும்பங்களை சேர்ந்த 380 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் சீரற்ற காலநிலையால் 7 வீடுகள் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளன எனவும் ரி.என்.சூரியராஜா குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கொடிகாமம் வடக்கு ஜே - 326 கிராம சேவர் பிரிவுக்குட்பட்ட சந்தை வீதியை, மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. என்.சூரியராஜா உள்ளிட்டவர்கள் புதன்கிழமை நேரடியாகச் சென்று பார்வை யிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள ரி.என்.சூரியராஜா, வீதியில் தேங்கி யுள்ள வெள்ளநரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமான முறையில் பணப் பரிமாற்றம் செய்வோரின் வங்கிக் கணக்கு முடக்கப்படும்!

## மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் எச்சரிக்கை



சட்டவிரோதமான முறையில் பணப் பரிமாற்றம் செய்பவர்களின் வங்கிக் கணக்குகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் முடக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து புலம்பெயர்ந்த இலங்கை மக்கள் தங்களின் உழைப்பினூடாக ஈட்டிய வருமானத்தை திருப்பி அனுப்புவதற்கு சட்ட ரீதியான வழி முறைகளை மாத்திரம் பயன்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அங்கம் - 209**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**541. இனப்படுகொலை என்றில்லாமல், உரோம சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மற்றக் குற்றங்களும் தண்டிக்கப்படுமா?**

குற்றங்கள் நடந்தன எனக் காணப்பட்டால் அவை சர்வதேச நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டு, அங்கு அந்தக் குற்றங்களை செய்தவர்கள் என அடையாளப் படுத்தப்படுவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றின் முன் ஆஜராகித் தங்களுக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்படுவதற்கு எதிராக வழக்காடலாம். அதன் பின்னர் அவர்களுக்கு தீர்ப்பு வரும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சில தமிழ் மக்கள் சாட்சியத்



திற்கு அழைக்கப்படலாம். அதைத் தவிர்த்து அந்த வழக்கு சர்வதேச நீதிமன்றின் வழக்கு தொடுனர் குழாமிலுள்ள சட்டத்தரணிகளால் நடத்தப்படும்.

அந்த வழக்குகளில் தரப்படும் தீர்ப்புகளாலும் தண்டனைகளாலும் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு ஓரளவு ஆறுதல் கிடைக்கும். ஆனால் அதில் அரசியல் பரிகாரத் தீர்வு தங்கியிராது.

ஆனால் இவை எல்லாம் எவ்வளவு காலங்கள் எடுக்கப் போகின்றன என்பவற்றையும் கணக்கிட்டு இன்று நடக்கின்ற ஆக்கிரமிப்புக்களால் தமிழ் மக்கள் ஓர் இனமாக அவ்வளவு காலம் தாக்குப் பிடிக்க முடியுமா என சிந்திக்க வேண்டும்.

**542. எவ்வளவு காலம் எடுத்தாலும் நீதிக்காகத் தொடர்ந்து போராடத்தானே வேண்டும்?**

நீதிக்கான போராட்டம், உரிமைக் கானவை தொடரத்தான் வேண்டும். ஆனால் எப்படியாக போராடுகிறோம் என்பதையும் கணக்கெடுத்து புத்திசாலித்தனமாக நிலைமைக்கு ஏற்ற வகையில் அவற்றை முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் மக்கள் 1991 இல் இருந்து சமஷ்டிக்காகப் போராடினார்கள். அதில் சுயாட்சி என்ற இழையும் ஓடியது.

இவற்றில் பலனேதும் காணாமல் 1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதன் மூலம் தமக்கிருந்த இறைமையை மீட்பதாகவும் தனித்தமிழ் ஈழம் அமைக்கவும் தீர்மானம் எடுத்தனர்.

தனிநாடு ஒன்று அமைக்கப் பிராந்திய வல்லரசான இந்தியா ஒத்துக்

> **Lord (Tariq)Ahmad of Wimbledon**
> @tariqahmadbt
>
> It was a pleasure to meet with M.A Sumanthiran today. We discussed upholding human rights, post conflict accountability and reconciliation, as well as the importance of respecting the rights of all minorities @TNAMediaOffice.

கொள்ளவில்லை. அதை அந்த அரசு திம்புவில் நடந்த சந்திப்புக்களில் தெளிவாக தெரிவித்தது.

இந்த அடிப்படை நிலைப்பாட்டையே சர்வதேச நாடுகள் எல்லாம் கடைப்பிடித்தன. தமிழ் மக்களை ஒரு நாடாக தங்களது காலனித்துவ ஆட்சியில் இணைத்து உருவாக்கிய பிரித்தானியா கூட அந்தத் தீர்மானத்தில் மாற்றம் கொண்டு வரத் தயாராகவில்லை. சர்வதேச நாடுகள் எல்லாம் ஸ்ரீலங்கா ஒரு நாடு,அங்கு சிறுபான்மையினராக பல இன, மத மக்கள் வாழ்கிறார்கள், அவர்கள் நீதியாகவும் சமத்துவமாகவும் வாழ வேண்டும் என்றே கணித்தன.

தமிழ் மக்கள் 1977 இல் இருந்து ஒரு தேசியப் போரை நடத்தியும், அது ஸ்ரீலங்காவினால் சர்வதேசத்துடன் 2009 இல் அழிக்கப்பட்ட பின்னும் சர்வதேசத்தின் மனப்போக்கு எப்படியாக அமைகிறது என்பதை சுமந்திரனின் குழு அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் அரசியல் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய சர்ச்சைகளில் இருந்து அறியலாம்.

**543. என்ன சர்ச்சைகள்?**

சுமந்திரனுக்கு எதிராகக் கனடாவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களை விடலாம். ஓர் ஊடகம் இப்படியான ஒரு பதிவை முன்வைத்திருக்கிறது.

'சுமந்திரன் மற்றும் அவரது குழுக்களுடனான சந்திப்பின் பின்னர் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் பயிற்சியாளர்கள் இலங்கையில் உள்ள பிரச்சினைகளை 'இலங்கையில் உள்ள சிறு பான்மை குழுக்களின் கவலைகள்' எனவகைப்படுத்தி இரண்டு டுவீட்களை அனுப் பினர். சிறு பான்மை குழுக்களுக்கு (தமி ழர்கள் மற்றும் முஸ்லிம்கள்) கவலைகள் இருக்கின்றன என சுமந்திரன் அமெரிக் காவுக்கும் ஏனைய இராஜதந்திரிகளுக் கும் தொடர்ந்து கூறிவருவதே இதற்குக் காரணம்.

அவர் உரையாடலில் தமிழர்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதில்லை. அவர் 'சிறு பான்மை குழுக்கள்' என்று கூறும் போது அவர் ஒற்றையாட்சி நாடு என்று பொருள்படுத்துகிறார். அதற்குத் தீர்வு தேவையில்லை என்பதும் அவரது நிலை.

உலகெங்கிலும் உள்ள இளம் தமிழ் புலம்பெயர் குழுக்கள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ட்வீட்டைக் கண்டித்துப் பல ஆயிரம் ட்வீட்களை அனுப்பத்தொடங்கின. தமிழில் அவர்களது ட்வீட் பின்வருமாறு:- 'பிரதிநிதித்துவம் மற்றும் நல்லிணக்கம் பற்றிய விவாதங்களில் தமிழ் மக்களை சிறு பான்மையினராக நீங்கள் தொடர்ந்து குறிப்பிடுவதற்கு நாங்கள் கடும் கண்டனத்தை தெரிவிக்கின்றோம். தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.'

ஆயிரக்கணக்கான எதிர்ப்பு ட்வீட்களுக்குப் பிறகு அமெரிக்க வெளியுறவுத் துறை பின்வரும் ட்விட் செய்தது.

'நிரந்தர சமாதானம் மற்றும் அவர்களின் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முழுக்குரல் கொடுப்பதற்காக இலங்கை தமிழ் மக்களுடன் அமெரிக்கா இணைந்து கொள்கின்றது."

> **State_SCA**
> @State_SCA
>
> Asst Secretary Lu underscores human rights are central to US foreign policy in Sri Lanka during his meeting with @TNAmediaoffice @GTFonline on #lka's reconciliation. The US joins Sri Lankan Tamil people in search for lasting peace & full voice in deciding their country's future.





> **State Department GCJ**
> @StateDept_GCJ
>
> @StateGCJ thanks @TNAmediaoffice & @GTFonline for productive discussion on political representation & reconciliation as part of a wholistic transitional justice agenda. Listening to perspectives & concerns of minority groups in Sri Lanka is essential to promoting reconciliation.

தாம் தான் 'சிறுபான்மைக் குழுக்கள்' என்பதை 'தமிழர்களாக' அமெரிக்காவை மாற்றச் செய்ததனர் என சுமந்திரன் ஆதரவு குழு IBC இல் பொய்யாகக் கூறியது.

மீண்டும் இங்கிலாந்தில் திரு சுமந்திரன் 'அனைத்து சிறுபான்மையினரதும் உரிமைகளையும் மதிப்பதன் முக்கியத்துவம்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார். இதனை இங்கிலாந்து அமைச்சரும் விம்பிள்டன் எம்.பியுமான அஹமட் ட்வீட் செய்துள்ளார்.

திரு. சுமந்திரன் எம்மை சிறுபான்மையினர் என இங்கிலாந்திலும் குறிப்பிடுவதை இது காட்டுகின்றது.

வெளிநாட்டில் பிறந்த தமிழ் இளைஞர்கள்தான் அமெரிக்க ட்விட்டை மாற்ற முயன்று வெற்றி பெற்றார்கள். எமது அடுத்த தலைமுறையினர் 'தமிழர் தாயகம் எமது நாடு' என்ற அங்கீகாரத்துடன் நிரந்தரத் தீர்வைக் காணத் தொடங்கியதை இது காட்டுகின்றது.

இப்படியான சர்ச்சைகளால்தான் தமிழ் மக்களது அரசியல் இன்றும் வாழ்கிறது. தொடர்கிறது.

# எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் ஆக்குவோம்

## ஐ.தே.க. பகிரங்க அழைப்பு



அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்பட வேண்டும். அதற்காக ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகிச்சென்றவர்களை மீண்டும் தம்முடன் கைகோர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ள ஐக்கிய தேசிய கட்சி பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன, அனைவரும் ஒன்றி ணைந்து சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தால் டொலர் நெருக்கடிக்குத் துரிதமாகத் தீர்வுகாண முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒரே குழுவில் இணைந்து செயற்பட வேண்டும்.

எதிர்த்தரப்பினர் பிளவடைந்திருக்கின்றமை அரசாங்கத்துக்கு சாதகமானதாக அமையும். மக்களைப் பற்றி சிந்திப்பதாக இருந்தால் எதிர்க்கட்சி பிளவடைந்திருப்பதை விட, இணைந்து செயற்படுவதே அத்தியாவசியமானதாகும்.

உரத்தை இலவசமாக வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் சேதன உரத்தை பலவந்தமாக விவசாயிகள் மீது திணித்து நாட்டின் விவசாயத்தை சீரழித்துள்ளது.

சேதன உரத்தை உற்பத்தி செய்வதற்கு நிதி உதவியளிப்பதாகக் கூறி விவசாயிகளை ஏமாற்றியுள்ளனர். எவ்வித பரிசோதனைகளும் இன்றியே சீன சேதன பசளையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக சீன கழிவுகளே நாட்டை வந்தடைந்தன.

இதனை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானித்த தரப்பினர் இலஞ்சம் பெற்றமையால் உரக்கப்பல் நிறுவனத்துக்கு 6.7 மில்லியன் டொலர் நஷ்டஈடு செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

உரத்தில் வித்தன்மையுடைய இரசாயனம் இல்லை என்று தற்போது அரசாங்கம் கூறுகின்றது. இந்த அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது ? சேதன உரத்தைப் புறந்தள்ளி தற்போது இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அரசாங்கம் இரசாயன உரத்தை இறக்குமதி செய்யப் போவதில்லை என்று கூறியுள்ளது. இது ஓர் அருமையான நகைச்சுவையாகும்.

இறக்குமதி செய்யப்படும் உரத்தை விநியோகிக்கும் விலையை இறக்குமதி நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. தற்போது யூரியா மூடை ஒன்றின் விலை 6 ஆயிரத்து 500 ரூபாவாகும்.

அன்று 500 ரூபாவிற்கு கொள்வனவு செய்த உரத்தை இன்று 6 ஆயிரத்து 500 ரூபாவிற்கு கொள்வனவு செய்து விவசாயிகள் எவ்வாறு விவசாயம் செய்வார்கள்? இவ்வாறு இரசாயன உரத்தைக் கொள்வனவு செய்து நெல் ஒரு கிலோவினை 200 ரூபாவிற்கு வழங்க வேண்டியேற்படும் என்று கூறுகின்றனர். அவ்வாறெனில் அரிசியின் விலை 400 ரூபா வரை அதிகரிக்கும்.

விவசாயிகளும் இதனால் பாதிக்கப்படுவர். நுகர்வோரும் இதனால் பாதிக்கப்படுவர். கையாலாகாத அரசாங்கம் தற்போது மக்களை கொல்லாமல் கொல்லும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடாவிட்டால் அடுத்த ஆண்டு பஞ்சம் ஏற்படும்.

சேதன உரம் தொடர்பில் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் அரசாங்கம், இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கும் அனுமதியளித்துள்ளது. களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைக் கூட இறக்குமதி செய்யத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதனால் அரசாங்கம் எதற்கு? இன்று மக்களுக்கு வாழக்கூடிய நிலைமை இல்லை. வாழ்க்கைச் செலவு 200 வீதமாக அதிகரிதுள்ளது. ஆனால் மக்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

செயற்பட முடியாத அரசு என்பதை நாடு முழுவதும் தற்போது நிரூபித்துள்ளது. டொலர் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இல்லை. 220 கோடி டொலர் மாத்திரமே அந்நிய செலாவணி இருப்பில் உள்ளது.

இவற்றில் தங்கத்தின் பெறுமதியைக் குறைத்தால் 150 கோடி டொலர் மாத்திரமே எஞ்சும். எமது உண்மையான அந்நிய செலாவணி இருப்பு இதுவேயாகும். அடுத்த ஆண்டாகும் போது 500 கோடி டொலர் வெளிநாட்டு கடனை மீள செலுத்த வேண்டியுள்ளது. அதனைச் செலுத்துவதற்குத் தேவையான டொலர் எம்மிடம் இல்லை. நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தற்போதைய நிதி நிலைமை பற்றிய அறிக்கையைக் கோரியுள்ளார். இன்னும் அரசாங்கம் அதனை வழங்கவில்லை. எனவே, உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடி டொலர் நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

சர்வதேச நாணய நிதியம் எமக்குக் கடன் வழங்கினால் ஏனைய நாடுகளும் எம்முடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முன்வரும்.

எனினும் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லத் தயாராக இல்லை. காரணம் அங்கிருந்து கிடைக்கும் நிதியில் மோசடி செய்ய முடியாது. அத்தோடு அரசாங்கத்தின் சில தரப்பினர் ஐ.தே.க. தலைவருடைய யோசனையை நடைமுறைப்படுத்தி அவர் பெருமையடைவதை விரும்பவில்லை.

நாடு என்ற ரீதியில் இலங்கை பாரதூரமான பொருளாதார நெருக்கடியில் உள்ளது. இந்த நெருக்கடிக்கு ஆளுந்தரப்பிலுள்ள எவரிடமும் தீர்வு இல்லை.

தற்போது நாட்டின் தேவை டொலர் இருப்பாகும். அதனைப் பெற்றுக் கொள்வதற்கு சர்வதேசம் ஏற்றுக் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக இருக்க வேண்டும். தற்போது நாடாளுமன்றத்திலுள்ள சர்வதேசம் ஏற்றுக் கொண்ட ஒரேயொரு தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமேயாவார்.

அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் டொலர் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காண்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறும். அவ்வாறில்லை எனில் உணவு தண்ணீர் இன்றி பஞ்சத்தால் உயிரிழக்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.

டொலர் தட்டுப்பாடு ஏற்படுமாயின் எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்படும். எரிபொருள் இறக்குமதி இடம்பெறாவிட்டால் அனைத்து சேவையும் ஸ்தம்பிதமடையும். மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு நிதி இன்மையால் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையமும் மூடப்பட்டுள்ளது.

இங்குதான் அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிபொருள் உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது. மழை காரணமாக நீர் மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக மின்சாரத்தை அரசாங்கம் வழங்குகிறது. எதிர்காலத்தில் அதனைச் செய்ய முடியாத நிலைக்கு நாடு தள்ளப்படும்.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் அடுத்த ஆண்டு மின்துண்டிப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது. இவை இவ்வாறிருக்க மறுபுறம் நாடளாவிய ரீதியில் சமையல் எரிவாயு கசிவால் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் எரிவாயு சிலிண்டர் தொடர்பில் பரிசோதிப்பதற்கு நிறுவனமொன்று இல்லை என்று அமைச்சர் கூறுகின்றார்.

அரசாங்கம் முழுநாடும் அச்சமடையக் கூடிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த அரசாங்கத்தை வெளியேற்ற அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைவது அவசியம்.

எனவே எம்மிலிருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் எம்முடன் கைகோர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இல்லையேல் இந்தப் பிரிவை அரசாங்கம் எப்போதும் அதற்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். - என்றார்.

# அங்கீகாரமற்ற உளவியல் நிகழ்ச்சிகளை மாணவர்களுக்கு நடத்திய நால்வர் கைது!

ஹாலி எல பாடசாலையொன்றில் மாணவர்களுக்கான அங்கீகாரமற்ற உளவியல் நிகழ்ச்சிகளை நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆலோசகர் ஒருவரும் அவரது மூன்று தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடசாலையில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுவதாகவும், அதற்காக வந்த பயிற்றுவிப்பாளர், தனியார் பாதுகாவலர்களுடன் கறுப்பு நிற ஆடை அணிந்து வாக்கிடோக்கிகள் மற்றும் கை பேசிகளை ஏந்தியவாறு வருகை தந்துள்ளார் எனவும் கிடைத்த தகவலையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு வலய அல்லது மாகாணக் கல்வி அதிகாரிகளிடமிருந்து உத்தியோகபூர்வ அனுமதி பெறப்படவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இந்த நிகழ்ச்சியை நடத்திய ஆலோசகர் எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திலும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்தத் தகுதியற்றவர் என்பதும் தெரியவந்தது.

பயிற்றுவிப்பாளருடன் வந்த மூன்று பாதுகாவலர்களிடம் இருந்து மூன்று வாக்கிடோக்கிகள், ஒரு ஏர் ரைபிள் மற்றும் ஏர் ரைபிளுக்கு பயன்படுத்தப்பட்ட 129 தோட்டாக்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 36, 24, 23 மற்றும் 30 வயதுடைய சிலாபம், இரத்மலானை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை பதுளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துன்னனர்.

# டெங்கு கட்டுப்பாட்டு வாரம் டிசெ. 6 யாழில் ஆரம்பம்!

யாழ். மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள நிலையில் டிசெம்பர் 6 தொடக்கம் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படஉள்ளன என யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடனான காலநிலையின் பிற்பாடு டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த வருடத்தைவிட இந்த வருடத்தில் கடந்த வாரம் வரை டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலை காணப்படுகின்றது.


கடந்த வாரம் வரை 133 நபர்களுக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. டெங்கு அதிகமாக செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அதிகரித்து காணப்படுகின்றது.

அதன் அடிப்படையிலேயே சுகாதார விழிப்புணர்வு குழுக் கூட்டத்தில் கொரோனா, டெங்கு தொடர்பில் ஆராய்ந்து இருந்தோம்.


அதற்கிணங்க டெங்கு கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து இருக்கின்றோம். அதன் பிரகாரம் எதிர்வரும் டிசெம்பர் 6 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்தை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப் படுத்தி அந்த வாரம் யாழ்ப்பாணக் குடாநாடு பூராகவும் அனைத்து பங்குதாரர்களுடனும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைரய மேற்கொள்ள இருக்கிறோம்.

அதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு செயலணி கூட்டத்தை நடத்தி அதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகவும் தங்களுடைய பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாட்டை மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி இருக்கின்றோம்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள உள்ளூராட்சி மன்றத்தினர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியினர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.



எஸ். அன்ரனி நோர்பேட்
(முன்னாள் சிரேஷ்ட
பேராசிரியர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)



# வங்காள விரிகுடாக் கடலில் தாழமுக்க அனர்த்தங்கள் உருவாகுவதற்குக் காரணமென்ன?

தென்னாசியாவின் வானிலையில் மே – செப்ரெம்பர் வரை ஆதிக்கம் செலுத்திய கோடை 'மொன்சூன்' பின்வாங்கியதற்குப் பின்னர் ஒக்ரோபர் – நவம்பர் காலத்தைக் கொண்ட இடைமொன்சூன் பருவம் ஆரம்பிக்கும். இந்தப் பருவத்தின் பிரதான வானிலை அம்சங்களாகக் காற்றுக்கள் ஒன்று கலக்கும் ஒருங்கல் வலயம், மேற்காவுகை நிகழ்வுகள், புயல்கள் மற்றும் சூறாவளிகள் என்பன இடம்பெறும். தென்மேல் மொன்சூன் காற்று இம்முறை வழக்கத்துக்கு மாறாகத் தாமதித்தே பின்வாங்கியது. இந்நிலையில் தென் அந்தமான் தீவுக்கு அண்மையிலுள்ள கடற்பரப்புக்களிலும், வங்காள விரிகுடாக் கடலிலும் தாழமுக்கங்கள் உருவாகி வலுப்பெறத் தொடங்கின. வானிலைச் செய்மதிகளின் துணையுடன் வானிலை எதிர்வுகூறலை மிகத் துல்லியமாக மேற்கொண்டு வரும் இந்திய வானிலை ஆய்வு மையம், வங்காள விரிகுடாக் கடலில் ஏற்படப்போகும் தாழமுக்கங்கள் பற்றி மிகத் தெளிவாக மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளது.

இந்த ஆய்வு மையத்தால் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலும், வானிலை ஆய்வு நிபுணர்களின் தகவல்கள் மற்றும் செய்மதித் தகவல்களின் இற்றைப்படுத்தல் ஆகியவற்றிலிருந்தும் பெறப்பட்ட தரவுகளின் படி 2022 ஜனவரி 25 ஆம் திகதி வரை தாழமுக்கங்களும், சிலவேளைகளில் தாழமுக்





கங்கள் வலுப்பெற்றுப் புயல்களாக மாறும் சூழ்நிலைகளும் மத்தியகோட்டை அடுத்துள்ள இந்து சமுத்திரப் பகுதியில் உருவாகக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. முதலாவது தாழமுக்கம் (1) நவம்பர் 13 இலிருந்து 19ஆம் திகதி வரை இடம்பெற்றிருந்தது. இத்தாழமுக்கம் நவம்பர் 18 இல் கரையைக் கடந்த போது தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்கள் வெளளத்தில் மிதந்தமையைக் காணமுடிந்தது.

இரண்டாவது தாழமுக்கம் (2) தென்கிழக்கு வங்கக் கடலில், அந்தமானுக்கும், இலங்கைக்கும் இடையில் உருவாகி நவம்பர் 23 தொடக்கம் நவம்பர் 29 வரை நீடிக்கும் எனக் கூறப்பட்டது. தமிழ்நாட்டை நோக்கி மேற்கு, வடமேற்காக கடலுடன் இணைந்த காற்றுச் சுழற்சியாகச் செல்லும் இந்த மேல் வளிமண்டலச் சுற்றோட்டம் தென் தமிழகம் வழியாக அரபிக் கடலுக்குச் செல்லும் போது பலமிழக்கும். இந்நிகழ்வால் இலங்கைக்கு மழை கிடைக்கும். நவம்பர் 25, 26 ஆகிய திகதிகளில் இலங்கையின் கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்கள் மற்றும் முல்லைத்தீவு, வவுனியா, மாத்தளை மாவட்டங்களிலும் மழைவீழ்ச்சி இடம்பெறும் என வானிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில் மேற்காவுகை மழையும், காற்றுச் சுழற்சியுடன் கூடிய கடுமையான மழைவீழ்ச்சியும் கடலோரப் பகுதிகளில் இடம்பெறும். தமிழகம் முழுவதும் 26, 27, 28, 29, 30 மற்றும் டிசெம்பர் 1 ஆகிய திகதிகளில் தொடர்ந்து மழை ஏற்படும். தமிழ் நாட்டில் பரவலாக எல்லா இடங்களிலும் 28 ஆம் திகதி மழைவீழ்ச்சி காணப்படும். அந்தமானில் இருந்து வந்த தாழமுக்கப் பகுதி கரையைக் கடக்காமல் தமிழகக் கரையில் தங்கி நிற்பதுடன், மேல் வளிமண்டலச் சுழற்சியுடன் கடலுடன் தொடர்பை ஏற்படுத்தித் தொடர்ந்து மேற்காவுகை மழையைக் கொடுத்துக் கொண்டிருக்கும். அதேவேளை, அரபிக் கடலுடன் இணைப்பை ஏற்படுத்தி கேரளா, கர்நாடக மாநிலங்களுக்கு அதிக மழையைக் கொடுத்து பின்னர் செயலிழக்கும். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் ஊடறுத்து புத்தளம், மன்னார் வளைகுடாவுக்குச் செல்லும் எனச் சிலரால் குறிப்பிடப்பட்டமை தவறான தகவலாகும்.

மூன்றாவது தாழமுக்கம் (3) டிசம்பர் 2 தொடக்கம் 5 ஆம் திகதி வரை நிகழும். இக்காலத்தில் தமிழ் நாடு, கேரளா, இலங்கைக்கு அதிக மழை கிடைக்கும். டிசம்பர் 5 இல் அரபிக் கடலை அடையும். இக்காலத்தில் புயல் உருவாகக் கூடிய சூழ்நிலை காணப்படும்.

நான்காவது தாழமுக்கம் (4) டிசெம்பர் 8 இலிருந்த டிசம்பர் 11 வரை நீடிக்கும். இந்தத் தாழமுக்கம் சுமாத்திரா, தென் அந்தமான் பகுதிகளிலிருந்து மேற்கு, வட மேற்காக நகர்ந்து இலங்கையின் மன்னார் விரிகுடாவின் மேலாகச் செல்லும். டிசெம்பர் 9, 10



ஆம் திகதிகளில் இலங்கையில் அதிக மழைவீழ்ச்சி இடம்பெறலாம்.

ஐந்தாவது தாழமுக்கம் (5) டிசெம்பர் 13 இலிருந்து டிசெம்பர் 22 வரை நிகழலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் குறிப்பாக 17, 18, 19 ஆம் திகதிகளில் மன்னார் வளைகுடாவின் மேலாகத் தாழமுக்கம் நகர்ந்து செல்லும்.

ஆறாவது தாழமுக்கம் (6) டிசெம்பர் 23 இலிருந்து 2022 ஆம் ஆண்டு சனவரி 2 வரை நிலை கொண்டிருக்கும். இத்தாழமுக்கத்தின் போது மீண்டும் மன்னார் வளைகுடா, குமரிக் கண்டப் பகுதிகளில் 27, 28, 29, 30 ஆகிய திகதிகளில் மழை இடம்பெறலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் தாழமுக்க விருத்தி நிலைமைகளால் ஜனவரி 30 ஆம் திகதி வரை வானிலைக் குழப்பங்கள் ஏற்பட்டு மழைவீழ்ச்சி ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டு வருகின்றது.


2021 ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து வட இந்து சமுத்திரத்தில் ஏறக்குறைய ஏழு தாழமுக்கங்கள் உருவாகியுள்ளன. ஆனால், அவற்றுள் எதுவும் சூறாவளியாக உருவாகவில்லை என்பது வழமைக்கு மாறான ஒரு நிகழ்வாகவே அமைந்துள்ளது.


இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்திய வளிமண்டலத் திணைக்களத்திலிருந்து கிடைக்கும் தரவு




களின் படி ஒக்ரோபர் – நவம்பர் காலத்தில் சூறாவளிகள் அதிகளவில் நிகழும் காலம் எனக் குறிப்பிடப்படும். இலங்கையிலும் இவ்வாறே கருதப்படுகின்றது. ஆனால், மொன்சூனுக்குப் பின்னர் சூறாவளிகளின் தோற்றம் இடம்பெறாத வருடங்களாக 1891 இலிருந்து ஐந்து தடவைகள் 1900, 1911, 1953, 1954, 1961 ஆகியவை அவதானிக்கப்பட்டுள்ளன.

வங்காள விரிகுடாவில் ஒக்ரோபரில் மூன்று மற்றும் நவம்பரில் நான்கு எனத் தாழமுக்கங்கள் உருவாகின. தாழமுக்கப் பகுதியின் தொடர்ச்சியொன்று ஒக்ரோபர் 27 இல் வங்கக்கடலில் உருவாகி நவம்பர் 3 இல் அரபிக் கடலை அடைந்ததுடன் மீண்டும் நவம்பர் 6 இல் வலுவடைந்து 7 இல் தாழமுக்கமாக மாறியது. ஆனால், இந் நிகழ்வு மேலும் வலுப்பெறுவதற்கு கிழக்கு மத்திய அரபிக்கடலில் காணப்பட்ட நிலைமைகள் சாதகமாக இருக்கவில்லை. 2021 ஒக்ரோபர் 18, 19 ஆகிய திகதிகளில் உருவாகிய தாழமுக்கம் கரையைக் கடந்த போது தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களின் கரையோரத்துக்கு அதிகளவான மழைவீழ்ச்சியைக் கொடுத்தது.



(10 ஆம் பக்கம் பார்க்க)



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்
செவ்வழி நயனம்

# திருநீற்றின் மகிமை

"நீறில்லா நெற்றி பாழ்; நெய்யில்லா உணவு பாழ்; ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்; மாறில் உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்; பாழே மடக்கொடி இல்லா மனை."

- என்பது ஔவையார் வாக்கு.

இங்கே பாழ் என்ற பதம் ஒன்றுமில்லாத வெற்றிடத்தைக் குறிக்கின்றது. அவ்வாறாயின் நீறில்லாத நெற்றி பயனற்றது என்பது கருத்தாகி திருநீறு அணிந்து கொள்வதன் மேன்மை புலனாகின்றது. திருநீறுக்கு விபூதி என்றும் அழைக்கும் வழக்கும் உண்டு. உயர்ந்த செல்வம் என்பது அதன் பொருள். சைவமக்கள் தமது கடவுளர்களை நன்றியுணர்வோடு வணங்குவதன் அடையாளமாக அதனை அணிந்து கொள்கின்றார்கள். திருநீற்றின் மகிமையை திருஞான சம்பந்தர் சுவாமிகள் தமது திருநீற்றுப் பதிகத்தில் மந்திரமாவது நீறு என்று ஆரம்பித்து 11 பதிகங்களில் தெளிவாக்கியுள்ளார். இத்தகு சமய நம்பிக்கைக்கு மேலாக, திருநீறு அணிவதில் ஆழமான அறிவியல் நியாயப் பாடுகள் பொதிந்துள்ளமையை சைவத்தமிழ் மக்கள் நேர்த்தியாக அறிந்திருந்தமை நோக்குதற்குரியது. இவ்வழி, நம் முன்னோர்களின் அறிவியல், வானவியல் அறிவின் ஆழத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் அவர்கள் வாழ்வியலில் ஒவ்வொரு செயலிலும் அறிவியலின் தாக்க முண்டு.

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பர். அதிலும் நெற்றி அறிவியலில் முக்கியம் பெற்றுக் கொள்கின்றது. எமது உடலில் நாடி நரம்புகள் யாவும் மூளையுடன் இணைப்புக் கொண்டுள்ளன. அவை நெற்றிப் பொட்டின் ஊடாகவே மூளையைச் சென்றடைகின்றன. அதனால் நெற்றிப் பகுதி பொதுவாகவே உஷ்ணமாகவே காணப்படும். அதேநேரம் மனிதனது வயிற்றின் அடிப்பகுதியிலும் இயல்பாகவே உஷ்ணம் காணப்படும். அந்தச் சூட்டின் தாக்கம் பெருமளவு உணரப்படுவதும் நெற்றிப் பகுதியிலேதான். மேலும் ஒருவருக்குக் காய்ச்சல் அறிகுறி தென்படின் உடனே நெற்றியில் கைவைத்து உடல் உஷ்ணத்தை மதிப்பிடுவதும் எம் முன்னோர் வழக்கம். இவற்றில் இருந்து நெற்றிதான் மனித உடலின் வெப்ப நிலை உணர்த்தும் மையம் என்பதைத் தெரிந்து கொள்வோம். அதேபோன்று மனித உடலுக்குத் தேவையான வெப்பமும் நெற்றி வழியாகவே உள்வாங்கப்படுகின்றது என்பதும் அறிந்து கொள்ள வேண்டிய தாகும்.

இந்த அறிவியல் சிந்தனைகளை உள்வாங்கியே சைவ மக்கள் ஏல உடம்பிடர் தீர்க்கு மின்பந்தரும் திருநீற்றை அணியலாயினர். சைவமக்களினால் உரிய முறைப்படி உருவாக்கம் பெறும் திருநீற்றுக்கு நல்ல அதிர்வுகளை உள்வாங்கும் சக்தியுண்டு. அதனாலேயே அவர்கள் பிரதானமாக நெற்றியிலும் மேலும் உடலின் கழுத்து, நெஞ்சு, கைகள், இடுப்பு, முதுகு என்று பல உறுப்புகளிலும் திருநீற்றினை அணிந்து கொள்கின்றார்கள். அது அவர்களின் உடல் ஆரோக்கியத்துக்கு உறுதுணையாகின்றது. மேலுமொரு அறிவியல் உண்மையை எம்முன்னோர் அறிந்திருந்தனர். அதன்படி நெற்றியில் எமது இரு புருவங்களுக்கும் இடையில் காணப்படும் மிக நுண்ணிய நரம்பு அதிர்வலைகளைப் பயன்படுத்தி மனவசியம் இலகுவாகச் செய்துகொள்ள முடியும் என்பதால் அதனைத் தடுக்க நெற்றியில் திருநீறு அணிந்து கொள்வதாகவும் அறிய முடிகின்றது.

நெற்றியில் சந்தனம், குங்குமம் அணிவதிலும் பல நன்மைகள் உள்ளன. நெற்றி எலும்பு பகுதியை மையப்படுத்தி நெற்றிப் பொட்டில் சந்தனம் குங்குமம் அணியும் போது அதன் குளிர்மை வெப்ப மிகுதியால் ஏற்படும் மூளைச் சோர்வு போன்ற நோய்களைக் குணமாக்கும் என்று கூறப்படுகின்றது. அது கற்றலுக்கும், தொழில் புரிவதற்கும் வேண்டிய உற்சாகத்தை அளிக்கின்றது. இதை உணராமல் பெண்கள் ஒட்டுப் பொட்டு வைத்துக் கொள்கிறார்கள், அதில் பூசப்பட்ட பசை உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் சூரிய வெப்பத்தை உட்செல்லவிடாது தடுக்கின்றது என்பதை உணர்வதில்லை. இவ்விடயத்தில் பெண்கள் கவனங்கொண்டு குங்குமம், சந்தனம் தரித்து புனிதம் பேணலும், அறுகம் புல்லை உணவாகக் கொள்ளும் பசுமாட்டின் சாணத்தில் வரட்டி செய்து, அதனை உமியில் அமுக்கி, எரியவிட்டு, அங்கு நீறு பூத்து வரும் வரட்டியினைப் பக்குவமாகச் சேமித்து, அதனைத் திருநீறாக பூசிவருதலும் நன்மைதரும் செயற்பாடுகளாகும்.

- துளசி ஆதித்தன் -
(மெல்பேர்ன், ஆஸ்திரேலியா)

# திரிகோணாசனம்

வாரம் ஓர் ஆசனம்



செய்(படி)முறைகள்:

1. ஆரம்ப நிலையில் நேராக நிற்கவும். (தடாசனம்) இந்நிலையில் சாதாரண சுவாசம் கொள்க.

2. இடக்காலிலிருந்து வலக் காலை ஒரு மீற்றர் தூரம் வரை இடைவெளிவிட்டு அகலமாக வைத்துக் கொள்ளவும். பின்னர் இரு கைகளையும் மூச்சை இழுத்த வண்ணம் தோள்பட்டை அளவுக்கு பக்கவாட்டில் உயர்த்தவும்.

3. மூச்சை வெளிவிட்ட வண்ணம் வலக்கைவிரல்கள் வலது பாதத்தின் கணுக்காலைத் தொடும் வரை வலது பக்கவாட்டில் வளைத்து இடக்கையை மேலே உயர்த்தி வலக்கையும் இடக்கையும் ஒரே நேர்கோட்டில் அமையுமாறு வைத்திருக்க வேண்டும். இடது உள்ளங்கை முன் நோக்கியிருக்க, தலையை திருப்பி பார்வையை இடது கைவிரல்களின் மேல் இருக்கும்படி வைத்து சாதாரணமாக சுவாசிக்கவும். - உச்ச நிலை

4. மூச்சை இழுத்தவாறு முன்பு போல் கைகளை கிடை மட்டத்திற்கு சமாந்தரமாக கொண்டு வரவும்.

5. மூச்சை வெளிவிட்டவாறு கைகளை கீழே விடவும். பின் வலக் காலை இடக்காலுக்கு அருகில் கொண்டு வந்து ஆரம்ப நிலைக்கு வரவும்.

குறிப்பு : இதே போல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமாகவும் (இடக் கால்) செய்தல் வேண்டும். ஒவ்வொரு பக்கமும் தலா மூன்று தடவைகள் செய்தல் வேண்டும். உடல் உபாதைகள் உள்ளவர்கள் தகுந்த குருவின் ஆலோசனையுடனேயே செய்தல் வேண்டும்.

பலன்கள்:-

உடம்பு முழுவதும் குறிப்பாக முதுகுத்தண்டும் தசைகளும் நீட்டப்படும். மார்பு, எலும்புகளுக்கு இடையிலுள்ள தசைகள், தொடைகள், கெண்டைக் கால்கள், தொடைத்தசை நார்கள் நன்கு நீட்டப்பட்டு வலிமை பெற்றுத் தளர்த்தப்படுகின்றன. கபச்சுரப்பி மற்றும் அட்ரினல் சுரப்பி என்பன நன்கு தூண்டப்படுகின்றன. சிறுநீரகங்கள் மற்றும் வயிற்றுப் புறத்திலுள்ள உறுப்புக்கள் (கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, சதையி முதலியவை) நன்கு அமுத்தப்பட்டு நன்கு செயற்படும். தேவையற்ற இடுப்புப்புறத் தசைகள் மற்றும் கொழுப்புக்கள் கரைக்கப்படுகின்றன. கண்பார்வைக் குறைபாடு, காதடைப்பு மற்றும் சுவாசக் கோளாறுகள் என்பன நீக்கப்படும். நீரிழிவு, கீழ்வாதம், பக்கவாதம், கூன் முதுகு, நாரிப்பிடிப்பு, தசைப்பிடிப்பு, கண்டமாலை முதலிய பல உபாதைகள் குணமாகும்.

- ஸ்ரீ. நதிபரன் -
(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்) (தொ.இல 077-1041455)

# பணிவு

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

பண்புடைய பெரியோர் எல்லோரிடமும் எப்பொழுதும் பணிவுடன் பழகுவார்கள், பண்பு இல்லாத சிறியோர், தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டு இறுமாந்து கிடப்பர்.

பணிவு என்பது மனிதராகப் பிறந்த எல்லோரிடத்திலும் இருக்கவேண்டிய முக்கியமான பண்புகளில் ஒன்றாகும். ஒரு மனிதன் சக மனிதனைப் பணிவுடன் நடத்துகின்றான் என்றால் அவன் வாழ்வில் முழுமை பெற்றவனாக விளங்குகின்றான் என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். பணிவு ஒன்றே மனிதனை நல்ல நிலைக்கு உயர்த்திச் செல்லும். பணிவு இல்லாத மனிதன் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் அவனால் நல்ல நிலையை அடையமுடியாது.

பண்புடைய நல்ல மனிதர்கள் எப்பொழுதும் பிறருடன் பணிவாகவே பழகுவார்கள். அவர்கள் தம்புகழ் பாடுபவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களின் புகழைப் பிறர் போற்றுவார்கள். ஆனால் பணிவு இல்லாத மனிதர்கள் தற்பெருமை பேசுபவர்களாக மட்டுமே இருப்பார்கள். அவர்களால் பிறருக்கு எந்த நன்மையும் இல்லை.

மனித குல வரலாற்றிலே பல சாதனையாளர்களை வரலாறு போற்றிச் சென்றுள்ளது. அவர்களின் வெற்றிச் சரித்திரத்திலே பொறுமை மிகச்சிறந்த இலக்கணமாகச் சுட்டப்பட்டிருப்பதை நாம் காணலாம். நம்முடைய நாளாந்த வாழ்விலே நாம் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது. பிரச்சினைகள் பெரிய சவால்களாக விளங்குகின்றன. பிரச்சினைகள் பல்வேறு வடிவில் வந்தாலும் அவற்றினை நாம் பொறுமையாகக் கையாண்டால் அப்பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதோடு சரியான தீர்வையும் பெற்றுக் கொள்ளமுடியும். பண்புடையவர்கள் வாழ்வதால்தான் மக்கள் வாழ்க்கை எப்போதும் நிலைத்து இருக்கிறது. அவர்கள் மட்டும் வாழாது போவார் என்றால் மனித வாழ்க்கை மண்ணுக்குள் புகந்து மடிந்துபோகும் என்பது வள்ளுவன் வாக்கு. எனவே நாம் எல்லோரும் பணிவுடைய நல்ல மனிதர்களாக வாழ்ந்து வாழ்வில் உயர் நிலையினை அடைவோம்.

- சி. குருபரநாத் -
(பட்டதாரிப் பயிலுநர்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)

# நல்லை கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான
ஆதிமுத லாயை முந்து வேலுருவ தோடி ருந்து
ஆருருளை யேவ ழுங்கி - வருவோனே
ஆலமர கீழி ருந்தும் ஆறுதலை வாரு கின்ற
ஆனைமுக னேவி ரும்பு - மிளையோனே
பாதிமதி சூடு கின்ற நாதசிவ னாரு கந்த
பால்முகம தாறு கொண்ட - வடிவேலா
பாலவடி வாக நின்று ஞாலஇறை காதி லன்று
பாகுமொழி யேயு கன்ற - குருநாதா
மோதவரு சூரர் நெஞ்சு தீதுபெற வேபி ளந்த
மோகனனெ வேயி லங்கு - குமரோனே
மூலமென யானை யன்று ஓலமிடு காலை வந்த
மோனஅரி நார ணன்தன் - மருகோனே
சீதவள மேனி கொண்ட மாதிருவர் சேர நின்ற
சேவடிய தேவ ணங்க - அருளாயோ?
சீலமலர் வாவி நின்று கோலமல ராடு நல்லை
சீரதுற வேயெ முந்த - பெருமானே!

- கவிஞர் ஜெகதாசன் -

# வங்காள விரிகுடாக் கடலில் ...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய அமெரிக்கத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட பூகோள எதிர்வு கூறல் முறைமை யின் படி இத் தாழமுக்கமானது சூறாவளியாக வலுப் பெறும் எனக் கூறப்பட்டிருந்தாலும் அந்நிலைமை ஏற்படவில்லை. இவ்வாறு சூறாவளி இடம் பெறாமைக்கு இம்முறைமை நிலத்துடன் கொண்டிருந்த சாதமற்ற இடைத்தொடர்புகளே காரணமாகும் என இந்திய வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டிருந்தது.

இந்தியாவுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்திய மிக மோசமான அம்பன் சூறாவளி, ஒடிசாவைப் பாதித்த யாஸ் புயல், அரபிக் கடலில் உருவாகி மகாராஷ்ரா, குஜராத்துக்கு சேதம் விளைவித்த ரக்தே புயல் என்பன மிக முக்கியமானவை. கடந்த நான்கு வருடங்களில் 12 சூறாவளிகள் வங்காள விரிகுடாக் கடலில் உருவாகி இந்தியாவின் கிழக்குக் கரையோர மாநிலங்களைப் பாதித்துள்ளன. வட இந்து சமுத்திரத்தில் அண்மைக் காலங்களில் சூறாவளிகளின் நிகழ்வுகள் அதிகரிப்பது பற்றிப் பலரின் கவனத்தையும் ஈர்த்தது குறிப்பிடத்தக்கது. வங்காள விரிகுடாவிலுள்ள பரந்தளவிலான தாழமுக்கம் அந்தச் சமுத்திரத்தின் சூடான நீரினால் உருவாக்கப்பட்டது. வளிமண்டலவியலாளர்களின் கருத்துப்படி புயல்களின் பிறப்பிற்குக் குழிவான அல்லது ஆழமற்ற வலிமையான காற்றுக்கள் நீரினைத் தள்ளுவதே காரணமாகும். இது புயலாகச் செறிவடைகின்றது. வங்காள விரிகுடா ஒரு தாழி வடிவத்தைக் கொண்டிருப்பதுடன் புயல்கள் தமது சக்தியைப் பெறுவதற்கு உதவுவதாகவும் உள்ளது. இதற்கு மேலாக உயர்வாகக் காணப்படும் மேற்பரப்பு வெப்பநிலை, வங்காள விரிகுடாக் கடலின் நிலைமைகளை மோசமாக்கி, புயல்களின் செறிவைத் தூண்டிவிடுகின்றன.

வங்கக் கடலில் மெதுவாக ஏற்படும் காற்றுக்களினால் கடுமையான மழைவீழ்ச்சி காணப்படுவதுடன், அங்கு சூழ்ந்து காணப்படும் சூடான வளியோட்டங்கள் வருடம் பூராகவும் வெப்பநிலைச் சார்பளவில் உயர்வாகவே பேணிவருகின்றன. பிரமபுத்திரா, கங்கை போன்ற வருடம் பூராகவும் இயங்கும் நித்திய ஆறுகளிலிருந்து ஏற்படும் சூடான நன்னீரின் தொடர்ச்சியான உள்வருகையின் காரணமாக வங்கக் கடலின் கீழுள்ள குளிர்ச்சியான நீருடன் கலப்பதைத் தடுத்து விடுகின்றது. பசுபிக் சமுத்திரத்திற்கும், வங்கக் கடலுக்கும் இடையில் நிலத் திணிவு குறைவாகக் காணப்படுவதனால் புயல்கள் கரையோரப் பகுதிக்குள் நகர்ந்து கடும் மழைவீழ்ச்சியைக் கொடுக்கின்றன. மொன்சூனுக்குப் பிந்திய காலத்தில் வட மேற்கு இந்தியாவிலிருந்து வங்கக் கடலை நோக்கி வரும் வளி அசைவுகள் இடம்பெறாத காரணத்தால் சூறாவளிக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

அரபிக் கடல் அமைதியாகக் காணப்படுவதுடன், அங்கு நிலவும் வலிமையான காற்றுக்கள் வெப்பத்தை ஓரிடத்தில் செறிவடைய விடாமல் சிதறடித்து விடுகின்றது. தொடர்ச்சியான நன்னீரின் வழங்கல் இன்மையினால் சூடான நீரானது அதன் கீழுள்ள குளிர்ச்சியான நீருடன் கலப்பதற்கு உதவுகின்றதுடன், மேற்பரப்பு வெப்பநிலையையும் குறைத்து விடுகின்றது. இக் கடலின் அமைவிடத் தன்மை காரணமாகப் பல நன்மைகளைப் பெறுகின்றது.

வங்கக் கடலில் உருவாகிய சூறாவளி (போலா) 1970 இல் கிழக்குப் பாகிஸ்தானிலும் ஐந்து இலட்சம் மக்களை அழித்து விட்டது. 2008 இல் மியன்மாரைத் தாக்கிய சூறாவளியினால் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்தனர். வங்காள விரிகுடாப் பகுதியானது மொன்சூனுக்கு முன்னரும், பின்னரும், அதன் மேல் மொன்சூன் பருவ காலங்களிலும் அமுக்க இறக்கங்கள் மற்றும் அயனச் சூறாவளிகள் ஆகியவற்றின் குழப்பங்களுடன் இணைந்து காணப்படுவதைக் காணலாம். இக் கடல் பகுதியின் மேலாகக் காணப்படும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மாறுபாடுகள் இக் குழப்பங்களின் தோற்றப்பாட்டில் மிக முக்கியமான வகிபங்கினைக் கொண்டிருக்கின்றன. வங்காள விரிகுடாவின் மேலாக வருடாந்த கடல் மேற்பரப்பு வெப்பநிலை 1985 - 1998 காலத்தில் 0.2 பாகை செல்சியஸ் என்ற வீதத்தில் (பத்து வருடங்களுக்கு) அதிகரித்துள்ளதாக ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வங்காள விரிகுடாவில் கடந்த காலத்தில் ஏற்பட்ட சூறாவளிகளின் (அம்பன், நிவர், புரவி, யாஸ்) தோற்றத்திற்கு காலநிலை மாற்றமே காரணமெனக் காலநிலை விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர். இந்திய உபகண்டத்தினைச் சூழ்ந்து காணப்படும் நீர் வழமைக்கு மாறாகச் சூடாகக் காணப்படுகின்றது. வங்காள விரிகுடா, அரபிக் கடல், இந்து சமுத்திரப் பகுதிகளில் கடல் மேற்பரப்பு வெப்பநிலைகள் 30 பாகை செல்சியஸுக்கும், 32 பாகை செல்சியஸுக்கும் இடையில் காணப்பட்டது. இத்தகைய சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலைகள் உயர்வாகக் காணப்படுவதினால்தான் அவை புயல்களுக்குச் சாதகமாக இருக்கின்றன. மழைவீழ்ச்சிப் பாதிப்பு மட்டுமன்றி, விவசாய உற்பத்திகளின் அழிவு, வெள்ளப்பெருக்கு, மக்களின் இடப்பெயர்வு என்பனவும் இடம்பெறுகின்றன. இது பற்றி விஞ்ஞானிகள் குறிப்பிடும் போது மானிடவியல் தொடர்பான காபன் வெளியேற்றங்களே சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை உயர்விற்குக் காரணமெனக் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவில் ரக்தே சூறாவளியினால் கரையோரத்தின் ஒன்பது மாவட்டங்களிலும், யாஸ் புயல் கிழக்குக் கரையோரத்திலும் பெரும் அழிவை ஏற்படுத்தின. இவ்விரு சூறாவளிகளுக்கும் இடையில் ஒற்றுமைத்தன்மை காணப்படுவதாக காலநிலை மாற்றங்களுக்கான அரசாங்கத்தின் குழுவைச் (ஐஊஊ) சேர்ந்த றொக்சி மத்தியு சொல் என்பவர் குறிப்பிட்டார். கடல் மேற்பரப்பு வெப்பநிலையில் காணப்பட்ட உயர்வினாலேயே, இவ்விரு சூறாவளிகளும் தூண்டப்பட்டன. அரபிக் கடலில் தோன்றிய ரக்தே புயல் பல நாட்களாக அரபிக் கடலில் நின்று வெப்பத்தையும், ஈரப்பதனையும் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொண்டதுடன் மணிக்கு 220 கிலோ மீற்றர் வேகத்தில் நகரக் கூடிய உச்சச் செறிவைப் பெற்றது. ஆனால் யாஸ் புயல் வடக்கு வங்கக் கடலில் உருவாகிக் கரையைக் கடப்பதற்கு சிறிதளவு தூரத்தினையே கொண்டிருந்தது. அம்பன் சூறாவளியினால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம் 13 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேல் காணப்பட்டது. யாஸ் புயல் ஒடிசாக் கரையை 185 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கி பெரு வெள்ளத்தை ஏற்படுத்தியது.

பரந்து விரிந்த பகுதியாகக் காணப்படும் வங்காள விரிகுடாக் கடல் சூடாகி வருவதினால் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் கொண்டுள்ளது. வெப்பநிலை உயர்வு, கடல் மட்ட மாற்றம், மழைவீழ்ச்சி அதிகரிப்பு, வரட்சி, வெப்ப அலைகள், அயனச் சூறாவளிகளின் செறிவு, சமுத்திரத்தின் அமிலமாக்கல் மற்றும் சமுத்திரத்தின் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இப்பகுதியில் ஏற்படும் தாக்கங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கடந்த 45 வருடங்களில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை 0.2 - 0.3 பாகை செல்சியசுக்கு உயர்ந்துள்ளது. இது மேலும் இந்நூற்றாண்டின் இறுதியில் 2.0 - 3.0 பாகை செல்சியஸ் ஆக உயரும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது (ராஜலெட்சுமி மற்றும் அச்சுதன், 2021). இதன் காரணமாகக் கடல் மட்டம் 2050 இல் 37 சென்ரி மீற்றர் உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பு, மற்றும் அமிலவாக்கம் காரணமாகக் கரையோர உணவுச் சங்கிலியின் பெரும் பகுதி மற்றும் இனங்களின் உற்பத்தித் திறன் என்பன பாதிக்கப்படும். பூகோள சமுத்திர மேற்பரப்பு வெப்பமாக்கத்துடன் ஒப்பிடும் போது இந்து சமுத்திரத்தின் மேற்பரப்பு வெப்பநிலை உயர்வு அதிகமாக உள்ளது. எனவே எதிர்வரும் காலங்களில் தாழமுக்கம் மற்றும் புயல்களின் உருவாக்கத் தளமாக வங்காள விரிகுடாக் கடல் அமைந்து விடக்கூடிய ஆபத்தான நிலைமை உருவாகியுள்ளது.

# எம்.எம்.பவுண்டேசன் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்.பல்கலை மாணவர் 50 பேருக்கு மாதம் ரூ.5,000



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயிலும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு எம். எம் பவுண்டேசன் நிதியத்தால் ஏ.கே.ஓ. புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த திங்கட்கிழமை கைச் சாத்திடப்பட்டது.

உள்நாட்டிலுள்ள தன்னார்வத் தொண்டு நிதியமான எம். எம் பவுண்டேசன் 2018 ஆம் ஆண்டு முதல் ஏ.கே.ஓ புலமைப் பரிசில் திட்டத்தில் பங்குதாரராகச் செயற்பட்டு நாட்டிலுள்ள வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், கலை, கலாசாரப் பணிகளுக்கும், காலநிலை மாற்றத்துக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் உதவிகளைப் புரிந்து வருகிறது. அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் தெரிவு செய்யப்படும் வருமானம் குறைந்த மாணவர்கள் 50 பேருக்கு முதற்கட்டமாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதன்படி, பல்கலைக்கழகத்துக்கும், எம். எம் பவுண்டேசன் நிதியத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் யாழ். பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரும், எம். எம் பவுண்டேசன் நிதியத்தின் சார்பில் அதன் முகாமைத்துவ அறங்காவலர் டி. நிமல் மரின்டஸ் மற்றும் அறங்காவலர் நிலங்கா மரின்டஸ் ஆகியோரும் ஒப்பமிட்டனர். இந்த நிகழ்வின் போது யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ். ஐங்கரன், நிதியாளர் கே. சுரேஸ்குமார் ஆகியோரும் உடனிருந்தனர்.

# ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளுக்கு விண்ணப்பிக்காதோருக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 03

ஆசிரிய கலாசாலைகளுக்கான புதிய கல்வியாண்டுக்கான அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ள போதிலும் கொவிட் நிலைமை காரணமாக விண்ணப்பிக்கத் தவறியோருக்கு நேரடியாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சையில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது பட்டதாரிகள் அல்லாத - க.பொத. சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் போதிய தகைமை பெறாவிடினும் - நிரந்தர ஆசிரியருக்கான நியமனக் கடிதத்தைக் கொண்டிருந்தால் இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்குவதற்கான அனுமதியைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தகைமையைப் பயன்படுத்தி இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ளாதவர்கள் இருப்பின் உடன் அருகில் உள்ள கலாசாலை அதிபர்களோடு தொடர்புகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் 121 குடும்பங்களை சேர்ந்த 380 பேர் சீரற்ற காலநிலையினால் பாதிப்படைவு

சீரற்ற காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் தற்போது 121 குடும்பங்களை சேர்ந்த 380 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் சீரற்ற காலநிலையால் 7 வீடுகள் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளன எனவும் ரி.என்.சூரியராஜா குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கொடிகாமம் வடக்கு ஜே - 326 கிராம சேவர் பிரிவுக்குட்பட்ட சந்தை வீதியை, மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. என்.சூரியராஜா உள்ளிட்டவர்கள் புதன்கிழமை நேரடியாகச் சென்று பார்வை யிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள ரி.என்.சூரியராஜா, வீதியில் தேங்கி யுள்ள வெள்ளநரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமான முறையில் பணப் பரிமாற்றம் செய்வோரின் வங்கிக் கணக்கு முடக்கப்படும்!

## மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் எச்சரிக்கை



சட்டவிரோதமான முறையில் பணப் பரிமாற்றம் செய்பவர்களின் வங்கிக் கணக்குகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் முடக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துபுலம்பெயர்ந்த இலங்கை மக்கள் தங்களின் உழைப்பினூடாக ஈட்டிய வருமானத்தை திருப்பி அனுப்புவதற்கு சட்ட ரீதியான வழி முறைகளை மாத்திரம் பயன்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

# எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்!

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



பாவனையாளர் அதிகார சபையினரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்பு வெடித்தல் இடம்பெற்ற பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கையின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

எரிவாயு அடுப்புகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறிய சம்பவங்கள் பல பதிவு செய்யப்பட்டுள்ளன. முதலில் கந்தரோடை அதன் பின்னர் வட்டுக்கோட்டை மற்றும் அராலி பகுதிகளில் இந்த சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

நாங்கள் இந்த நிலைமை தொடர்பில் ஆராய்ந்து கடந்த வார இறுதியில் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக மேற்படி நிலைமை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தோம்.

அவர்கள் விசாரணை மேற்கொண்ட போது பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமைப் பீடம் இந்த விடயங்களை, அதாவது எரிவாயு அடுப்பு வெடித்தல் சம்பவங்களை அந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களின் ஊடாக விசாரணை செய்து அதனைச் சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளார்கள்.

எனவே எமது பாவனையாளர் அதிகார சபையினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்பு வெடித்தல் இடம்பெற்ற பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கையின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக இந்த விடயம் தேசிய மட்டத்தில் இடம் பெற்றுவரும் ஒரு சம்பவமாகும். எனவே, இந்த விடயம் தொடர்பில் பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இந்த விடயத்தைக் கையாள வேண்டும். குறிப்பாகப் புதிதாக எரிவாயு சிலிண்டர்களை பெற்றவர்களிடமிருந்தே இந்த முறைப்பாடு அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு விஜயம் செய்யும் தமிழக அதிகாரிகள் குழுவினர்!

கொழும்பு, டிசெ. 03

இலங்கையின் பல்வேறு துறைமுகங்களில் மீட்க முடியாத நிலையில் உள்ள இந்திய மீன்பிடி படகுகளை ஏலம் விடுவதற்கான வழிமுறைகளை இறுதி செய்வதற்காக தமிழகத்தைச் சேர்ந்த குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லே மற்றும் தமிழக அரசின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இது தொடர்பான முடிவு அறிவிக்கப்பட்டது.

2021 நவம்பர் 21 ஆம் திகதி முதல் 24 வரையான காலத்தில் ஸ்ரீஉண கோபால் பாக்லே தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு பயணம் செய்தார்.

உயர்ஸ்தானிகர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மக்கள் - மக்கள் உறவுகள் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாக அவருக்கும், தமிழகத்தின் உயர் அதிகாரிகளுக்கும் விளக்கமளித்தார்.

தனது பயணத்தின் முதல் நாளில், உயர்ஸ்தானிகர் இராமேஸ்வரம் கடற்கரை நகரத்துக்குச் சென்று இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக உள்ளூர் மீனவ மக்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் உயர்ஸ்தானிகர் திருச்சிராப்பள்ளியில் உள்ள இலங்கை புனர்வாழ்வு முகாமுக்கும் சென்று அங்கு தங்கியுள்ள இலங்கை அகதிகளிடம் கலந்துரையாடினார்.

# 15 வயதுக்கு உப்பட்டவர்களுக்கு எச்.ஐ.வி அற்ற நாடாக இலங்கை

15 வயதிற்குப்பட்டவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதைத் தடுத்த நாடாக இலங்கை சுகாதார நிறுவனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.ராகுலன் தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி தினம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வருடாவருடம் டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதனுடைய நோக்கம் எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை எல்லோர் மட்டத்திலும் ஏற்படுத்துவதும், சிகிச்சை பெறுவது தொடர்பான முன்னேற்றங்களை வருடா வருடம் வெளியிடுவதும் ஆகும்.

வவுனியா மாவட்டத்தின் எயிட்ஸ் நோய்த் தடுப்பு செயற்திட்டம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. உலகளாவிய ரீதியில் இது வரையில் 38 மில்லியன் எச்.ஐ.வி நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 1.7 மில்லியன் நோயாளர்கள் 15 வயதுக்குக் குறைந்தவர்கள். இந்த அடிப்படையில், குழந்தைக்குத் தொற்று ஏற்படுவதைத் தடுத்த ஒரு நாடாக 2019 ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் இலங்கைக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

2017 இற்கு பிற்பாடு எந்த விதத்திலும் 15 வயதுக்கு உப்பட்டவர்கள் அடையாளம் காணப்படவில்லை. அதனை அடிப்படையாகக் கொண்டு அந்த சான்றிதழ் வழங்கப்பட்டது. அதனை ஆராய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக வவுனியா மாவட்டமும் காணப்படுகின்றது.

வவுனியா மாவட்டம் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளைக் கடுமையாக முன்னெடுத்து வருகின்றது. மக்கள் இந்த நோய் தொடர்பான சரியான புரிதலுடன் செயற்பட வேண்டும். அதன் மூலம் இந்த நோயை நாம் முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# நாடு கடத்தப்படவிருந்த தமிழ்க் குடும்பம் பிரித்தானியாவில் தொடர்ந்து தங்க அனுமதி

பிரித்தானியாவில் இருந்து நாடு கடத்தப்படும் ஆபத்தில் இருந்த இலங்கைத் தமிழ் குடும்பத்தை தொடர்ந்து பிரித்தானியாவில் தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலிவு விலையில் சூரிய ஆற்றலைப் பெறுவதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டு வரும் முன்னணி விஞ்ஞானியான இலங்கைத் தமிழர் மற்றும் அவரது குடும்பத்தை நாடு கடத்தும் திட்டத்தை பிரித்தானிய உள்துறை அலுவலகம் மாற்றியுள்ளது.

பிரித்தானிய உள்துறை அலுவலகத்தின் நடைமுறை பிழைகளால் காரணமாக முகுந்தனும் குடும்பத்தினரும் நாடு கடத்தப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்த நிலையிலேயே அவருக்கு புகலிடம் வழங்கியுள்ளது.

2018 ஆம் ஆண்டில் முகுந்தன் பிரித்தானியா சென்றிருந்தார். அவரின் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், 2019 இல் அவர் சுகவீனமுற்றிருந்த தனது தாயாரைப் பார்ப்பதற்காக இலங்கைக்கு வந்த வேளை சித்திரவதைக்கு உள்ளாகியிருந்தார். கடந்த வருடம் அவர்களின் தொழில் அனுமதி முடிவிற்கு வந்தது.

செப்ரெம்பர் 2021 இல் பிரிட்டலில் இருந்து லண்டன் ஹோட்டலுக்கு அழைத்து சென்ற அதிகாரிகள் அவர்களுடைய புகலிடக்கோரிக்கை பரிசீலனையின் கீழ் உள்ளது எனத் தெரிவித்திருந்தனர். எனினும் ஒக்ரோபர் 11 ஆம் திகதி மின்னஞ்சலில் அவர்களின் புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாக உள்துறை அலுவலகம் தெரிவித்திருந்தது.



உள்துறை அலுவலகத்தின் இந்தத் தவறுகள் தொடர்பாக கடும் விமர்சனங்கள் வெளியாகியிருந்தமையுடன் முகுந்தன் தனது சட்டத்தரணி மூலம் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில் உள்துறை அமைச்சு தனது முடிவை மாற்றியுள்ளதுடன் முகுந்தன் குடும்பத்தினருக்கு அகதி அந்தஸ்த்தை வழங்கியுள்ளது. உள்துறை அமைச்சின் முடிவை முகுந்தன் வரவேற்றுள்ளார், உள்துறை அமைச்சு என்னுடையதும் எனது குடும்பத்தினரினதும் உயிர்களைக் காப்பாற்றியுள்ளது என முகுந்தன் தெரிவித்துள்ளார்.

# இளம் குடும்பஸ்தர் அடித்துக்கொலை!

## பொலிஸார் தீவிர விசாரணை

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் சம்புக்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4. 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நண்பர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் தடியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் நோயாளர் அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த புதன்கிழமை சிகிச்சை பலன் இன்றி அவர் உயிரிழந்தார்.

இராமையா இராமஜெயம் எனும் ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரனைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆளுநரின் எச்சரிக்கை சிறுபிள்ளைத்தனமானது; போராட்டத்தை அடக்க அவருக்கு அதிகாரமில்லை

## ஸ்ரீகாந்தா கடும் கண்டனம்




(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான காணி அளவீடு களுக்குத் தொடர்ந்தும் இடையூறு விளைவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்திருக்கிறார் எனச் செய்திகள்வெளியாகியிருக்கின்றன. ஆளுநரின் இந்த எச்சரிகை சிறுபிள்ளைத்தனமானது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீடுகளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட மக்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இணைந்து எழுப்பியிருந்த எதிர்ப்புக் குரல்களின் ஓர் அங்கமாகவே மாதகலில் காட்டப்பட்ட எதிர்ப்பும் அமைந்துள்ளது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டது என்று இலங்கை அரசு பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பின்னரும், போர் நிகழ்ந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படைத் தரப்பின் பிரசன்னம் என்பது போர்க்காலத்தைப் போலவே தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. பல்வேறு படைத்தளங்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்களும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையில் கள்ளக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதைத் தடுப்பது என்ற பெயரில் 1957இல் காரைநகரில் நிறுவப்பட்ட கடற்படைத்தளம் தொடர்ந்து விஸ்தரிக்கப்பட்டு ஒரு பாரிய தளமாக நிலைத்து நிற்கையிலும் கூட இந்த விஸ்தரிப்புக்கள் தொடர்கின்றன.

இன்னுமோர் பாரிய கடற்படைத் தளம் காங்கேசன்துறையிலும் இருக்கின்றது. ஆயினும், மாதகலில் உள்ள கடற்படை முகாமின் தேவைக்காகத் தனியார் காணி ஒன்றை சுவீகரிக்கும் திட்டத்துடன் முன்னெடுக்கப்பட்ட அளவீட்டு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது வடக்கு மாகாண ஆளுநரால் விடுக்கப்பட்டிருக்கும் சட்ட நடவடிக்கை தொடர்பான எச்சரிக்கை, நீடித்துக் கொண்டிருக்கும் காணி அபகரிப்புப் பிரச்சினையை மேலும் சிக்கல் அடைய வைத்துப் பாரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம்.

தம்மைப் பாதிக்கும் எந்தவொரு அரச நடவடிக்கைக்கும் எதிராக சமூகமட்டத்தில் எவரும் சட்டத்துக்கு அமைவாக எதிர்ப்புத் தெரிவிக்க முடியும். அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இந்த உரிமை நீதிமன்றங்களினாலும் பாதுகாக்கப்படுகின்றது.

மாதகல் உட்பட வடக்கில் தொடரும் காணி அபகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த உரிமையின் அடிப்படையிலேயே எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

வடக்கைப் பொறுத்த மட்டில் இது ஒன்றும் புதிய விடயமல்ல, புதிய ஆளுநர் வடக்குக்கு வருவதற்கு முன்பிருந்தே நிலை கொண்டு, நீடித்து நிற்கும் விவகாரம்.

இந்தப் பிரச்சினையில் அதிகாரபூர்வமாகத் தலையிடுவதற்கு சட்டத்தின் கீழ் ஆளுநருக்கு இடமில்லை. தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களோடு வடக்கு மாகாண சபை இயங்க முடியாமல் ஸ்தம்பிக்க வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதன் சகல அதிகாரங்களையும் கையாளும் ஆளுநருக்கு காணி மற்றும் பொலிஸ் துறை தொடர்பான எந்த அதிகாரமும் கிடையாது.

அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் துறை சம் பந்தப்பட்ட அதிகாரங்கள் இன்னமும் பகிரப்படாத நிலையில், அந்த அதிகாரங்கள் எவையும் ஆளுநருக்குக் கிடையாது. மாறாக, இந்த அதிகாரங்கள் மத்திய அரசிடமே உள்ளன. இதுதான் யதார்த்தம்.

நிலைமை இப்படி இருக்கையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஆளுநர் எச்சரிப்பது சிறுபிள்ளைத்தனமானது.

பதவி ஏற்ற கையோடு வடக்கில் வாள் வெட்டுக் குழுக்களை அடக்கப் போவதாக ஆளுநர் அறிவித்தபோது, அது நல்ல நிலைப்பாடாக இருந்தாலும், அது தொடர்பில் அவருக்கு அதிகாரம் இல்லை என்பதை அப்போது நாம் சுட்டிக்காட்ட விரும்பியிருக்கவில்லை. ஏனெனில் பதவி ஏற்றுக்கொண்ட நிலையில் எதிர்மறையான கருத்தோடு அவரை வரவேற்பது அரசியல் நாகரிகம் அல்ல என்றே நாம் கருதினோம்.

பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு இராஜ்ஜியத்தை ஆள்வது போன்ற கனவுகள் கலைவது பொதுவாக சகலருக்கும் நன்மையானது.

காணி அபகரிப்புக்கு எதிரான நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டம் பாய வேண்டுமானால் கொழும்பிலிருந்து தான் அது ஏவப்பட வேண்டும். நெருக்கடிக்கு ஆளாகியிருக்கும் அரசு, எவர் தூண்டினாலும் இன்றைய சூழ்நிலையில் அதனைத் தவிர்க்கவே விரும்பும் என்பது எமது கணிப்பு. மாறாக சட்ட நடவடிக்கைகள் தொடுக்கப்படுமானால், சிறு எண்ணிக்கையில் மக்கள் கலந்துகொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பதிலாக பாரிய போராட்டங்களுக்கே அவை அடி கோலும்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சட்டத்தின் ஆட்சி தொடர்பில் கரிசனை காட்டும் அதேவேளையில் பொது மக்களுக்கு எதிராக பொல்லுகளோடும் மிரட்டல்களோடும் அன்றைய தினம் மாதகலில் அரங்கேற்றப்பட்ட சட்டவிரோத சம்பவங்கள் பற்றியும் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். பிறப்பால் தமிழர். தகைமைகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர். உணர்வுபூர்வமான விவகாரங்களில் வடக்கு மக்களின் மனங்களைக் காயப்படுத்தாமலும் கோபப்படுத்தாமலும் வெல்வதற்கு அவர் முன்வர வேண்டும் என்பதே எமது ஒரேயொரு வேண்டுகோள் - என்றுள்ளது.

## நேற்று 735 பேருக்கு கொரோனா உறுதி

இலங்கையில் நேற்று 735 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 65 ஆயிரத்து 468 ஆக எகிறியுள்ளது.

அவர்களில் 9 ஆயிரத்து 918 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 341 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 41 ஆயிரத்து 124 ஆக அதிகரித்துள்ளது.

## 8 மாதங்களுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீர்குலைக்கும் வகையிலும், மக்கள் மத்தியில் கோபத்தைத் தூண்டும் வகையிலும் இதுபோன்ற கருத்துக்களைப் பிரதிவாதி கூறியதாக முறைப்பாட்டாளர்கள் நிரூபிக்கத் தவறிவிட்டனர் என்று குறிப்பிட்டார்.

இதன்படி, அவர் மீதான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்க அரசுத் தரப்பு தவறியதால், குற்றவாளியை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் இருந்து விடுவித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

கடந்த மார்ச் 9ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்தின் ஊடாக, மதக் குழுக்களுக்கிடையில் பகைமையைத் தூண்டியமை, பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தை மீறிய இரண்டு குற்றச்சாட்டுகளின் பேரில் அஸாத் ஸாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆரியகுளம் மகிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விருந்தினர்களாக தியாகந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆரியகுளத்தின் வரலாற்றை எடுத்துக்கூறும்வகையில் நினைவுக்கல் மூன்று மொழிகளிலும் திறந்து வைக்கப்பட்டதுடன் ஆரியகுளம் பெயர் பொறிக்கப்பட்ட எழுத்துரு திறக்கப்பட்டு, ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வாண வேடிக்கைகள், தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

மேலும், மதத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர், மாநகர சபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வடக்கு மின்னுற்பத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் மூன்று செயற்றிட்டங்களையும் கைவிட்ட சீன நிறுவனம், மாலைத்தீவுகளிலுள்ள 12 தீவுகளில் சூரிய சக்தி மின்னுற்பத்தி திட்டங்களை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்துள்ளது.

இதற்கான உடன்படிக்கை, அந்நாட்டு அரசுடன் கடந்த 29ஆம் திகதி கைச்சாத்திட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவில் மின்னுற்பத்தி செயற்றிட்டத்தை ஆரம்பிக்க அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், சீன நிறுவனத்தின் இந்தச் செயற்றிட்டங்கள் தொடர்பில் விழிப்புடன் இருப்பதாக இந்தியா பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், வடக்கிலுள்ள மூன்று தீவுகளிலும் ஆரம்பிக்கப்படவிருந்த மின்னுற்பத்தி செயற்றிட்டங்களை சீனா இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காணி உரிமையாளர்களை சந்தித்தார் வடக்கு ஆளுநர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.03

யாழ்ப்பாணம் - மாதகல் பகு தியில் கடற்படையிரின் பயன் பாட்டுக்கென அளவீடுசெய்ய முற்பட்ட காணிகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை வடக்கு மாகாண ஆளுனர் ஜீவன் தியாகராஜா நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

காணி உரிமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் தனித்தனியாக கலந்துரையாடிய வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமம் தொடர்பில் கேட்டறிந்தார்.

சிலருடைய காணிகளுக்கான சட்ட நீதியான உரிமங்கள் இல்லாமை ஆளுநரால் அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த விடயம் தொடர்பில் சங்கானை மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலாளர்களை நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

## பொதுமக்களையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணி சுவீகரிப்பு விடயத்தில் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்கள் உட்பட்ட பொதுமக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் - பிரதேசத்து விடயங்களைக் கையாளும் அரச அதிகாரிகள், மேலிடத் தரப்புக்களால் கடும் அழுத்தங்கள், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்றும் - கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பான களநிலை அறிக்கையை சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் இருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையிலேயே, பொதுமக்களையும், அரச அதிகாரிகளையும் வீணாக அச்சுறுத்திப் பகைக்கும் மார்க்கத்தை நாடாமல், சுமுகமாகத் தீர்க்கும் வழிமுறைகளை மேற்கொள்ளும்படி பிரதமர் அலுவலகத்தினால் பாதுகாப்பு அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

பிரதமர் அலுவலகத்தின் வழிகாட்டலை சாதகமாகப் பரிசீலிக்கும் பதில், பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

தமிழ் மக்களின் தனியார் காணிகளைப் பலவந்தமாகப் பிடுங்கும் படைத் தரப்பின் நடவடிக்கை வரும் மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்திலும் எதிரொலிக்கும் என்பதால் இந்த விடயத்தை சர்ச்சையின்றிக் கையாள வேண்டும் என்பதில் அரசுத் தலைமை கரிசனையாக இருப்பதாகவும் -

ஆனால், இது விளங்காத இடைத்தரப்புக்கள் சில, தாங்கள் மேலிடத்தில் நல்ல பெயர் எடுப்பதற்காக 'குத்தி முறிகின்றன' எனவும் கூறப்பட்டது. (உ)

# முள்ளிவாய்க்காலில் பத்திரிகையாளர் தாக்குதல் திரிபுபடுத்தப்பட்டுள்ளது!

## மறுக்கிறது இலங்கை இராணுவம்

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம், டிசெ.3

முள்ளிவாய்க்காலில் பத்திரிகையாளர் தாக்கப்பட்டமை தொடர்பிலான விவரங்கள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடரபில் இலங்கை இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

அண்மையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உண்மைகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள இராணுவத் தலைமையகம் ஊடகவியலாளர் மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை எனவும் கூறியுள்ளது.

இலங்கை இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள விளக்க அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவைச் சேர்ந்த சுதந்திர ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது படையினர் நடத்தினர் எனக் கூறப்படும் தாக்குதல் தொடர்பாக இலங்கை இராணுவம் மற்றும் அதன் இராணுவ பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இராணுவத் தளபதியின் அறிவுறுத்தல்களுக்கமைய மேற்படி சம்பவம் இடம்பெற்ற சில மணித்தியாலங்களில் அதாவது 2021 நவம்பர் 27ஆம் திகதி அந்த இடத்தில் கடமையாற்றிய 682 படைப்பிரிவு படையினரிடம் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பல்வேறு சமூக ஊடகத் தளங்கள் மற்றும் நாட்டின் சில அச்சு ஊடகங்கள் என்பன இந்தச் சம்பவம் தொடர்பாக சரிபார்க்கப்படாத - உறுதிப்படுத்தப்படாத - மிகைப்படுத்தப்பட்ட மற்றும் உண்மைக்குப் புறம்பான - தகவல்களை வெளியிட்டன.

உண்மையில், படை வீரர் ஒருவர் முள்ளிவாய்க்கால் பெயர் பலகையுடன் இணைந்ததாக இராணுவத்தினரை ஏன் படம் பிடிக்கிறீர்கள் என ஊடகவியலாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வீதியோரத்திலுள்ள பெயர் பலகையைப் படமெடுக்கும் போது அந்த இடத்தில் இருந்த இராணுவ வீரர்களால் அவர் 'மிருகத்தனமாக' தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டார் என்று கூறும் அளவுக்கு படப்பிடிப்பிற்கான காட்சிகள் எடுக்கப்பட்டன.

மேலும் அவர்கள் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்து, அந்த நபரை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அன்றைய தினம் காலை சேர்த்துள்ளனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட ஊடகவியலாளருக்கு கீறல் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

முதன்மைச் சாட்சியத்தின் பேரில் அந்த இடத்தில் பணியில் இருந்த மூன்று இராணுவ வீரர்களையும் பொலிஸார் கைதுசெய்து மேலதிக விசாரணைகள் நிலுவையில் உள்ள நிலையில் அவர்களை பிணையில் விடுவித்தனர்.

இதற்கிடையில் மேற்படி ஊடகவியலாளர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவ - சட்டப் பரிசோதனை அறிக்கை, இந்த ஊடகவியலாளர் 'சிராய்ப்பு' மற்றும் 'சிறு காயம்' என்பவற்றுக்கு மட்டுமே சிகிச்சை பெற்றார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை 'முட்கம்பியால் சுற்றப்பட்ட பனைக் குச்சியால் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்' என சர்வதேச விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட கூற்றுக்கு இது முற்றிலும் மாற்றமாக அமைந்திருந்தது.

சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்கப்பட்ட 'பத்திரிகையாளர்கள்' இதுபோன்ற நடவடிக்கைகளால் 'பத்திரிகையாளர்கள்' என்றழைக்கப்படுபவர்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கத் தயாராக உள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பாதுகாப்புப் படையினர், கடந்த இரண்டு வருடங்களில் மக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் ஆரோக்கியமான நல்லிணக்கம் மற்றுமநல்லெண்ண உணர்வுகளின் சைகைகளின் காரணமாக சந்தர்ப்பவாத மற்றும் இனவாத எண்ணம் கொண்ட சக்திகளால் ஏமாற்றப்படாமல் ஒரு நேர்மறையான முறையில் ஈர்க்கக்கூடிய வகையில் வளர்ந்துள்ளனர்.

வடக்கிலும் சரி, வேறு இடங்களிலும் சரி, தாம் சேவை செய்யும் அனைத்து இலங்கையர்களின் நலன்களுக்கான உண்மையான மற்றும் முழுமையான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தும் அதே வேளையில் பகுத்தறிவு மற்றும் அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும், இதுபோன்ற திரிபுபடுத்தப்பட்ட சம்பவங்கள் மற்றும் தீங்கிழைக்கும் நிகழ்வுகளை நம்பி ஏமாற வேண்டாம் என இராணுவம் கேட்டுக் கொள்கிறது.

அதற்குப் பதிலாக, நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திப் பாதையின் புதிய சகாப்தத்தை உருவாக்க ஒன்றாகக் கைகோர்க்குமாரு இராணுவம் வேண்டுகோள் விடுக்கின்றது. - என்றுள்ளது.

## சரியான தலைமைத்துவத்தின் கீழான செயற்பாடுகள் உரிமையை உறுதிப்படுத்த முன்னெடுக்க வேண்டும்

### விடுதலைப் புலிகள் கட்சி பிரமுகர் தெரிவிப்பு

உரிமை தொடர்பில் பேச்சளவில் மட்டும் பேசிக்கொள்ளும் சமூகமாக இருக்காமல் உண்மையாகவே உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய சரியான தலைமைத்துவத்தின் கீழ் நாங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கல்விப்பிரிவுக்கான இணைப்பாளரும் பிரபல வர்த்தக ஆசிரியருமான கே.கே.அரஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களுக்கு நிதியுதவிகள் வழங்கும் நிகழ்வு, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது, நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே கே.கே.அரஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஊடாக கிராமிய ரீதியான பொருளாதாரம் வலுவாக கட்டமைக்கப்படுவதற்கான பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை கல்விக்கும் கலாசார விடயங்களுக்கும் அதிகளவான நிதிகள் இந்த வரவு - செலவுத் திட்டம் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என கே.கே. அரஸ் கூறியுள்ளார்.

அத்துடன், சமூகத்தை நல்வழிப்படுத்தக்கூடிய வகையில் ஆலய நிர்வாகங்கள் செயற்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மூன்றாவது கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கந்தளாயில் முன்னெடுப்பு

திருகோணமலை - கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூன்றாவது கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது பைசர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

அத்தோடு தடுப்பூசி செலுத்தாதவர்கள் மற்றும் ஒரு முறை தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் இரண்டாவது தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டன.

அதிகமான அறுபது வயதைத் தாண்டிய முதியவர்கள் ஆர்வத்தோடு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மீளத்திறக்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 03

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மீளத் திறப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை விற்பனை செய்வதற்கு எந்தவித ஏற்பாடும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், குறித்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தைக் கொள்வனவு செய்வதற்கு எவரும் முன்வரவில்லை என்றும் அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2021 இல் வெளியிடப்பெற்றது.